முரசு : 7 ஒலி: 76
6 பக்கங்கள் விலை: 500 காசுகள்
MALAI MURASU
Regn. No.VL/033/2019-2021
RNI Regn. No. TNTAM/2016/75062

வைர விழா முரசு
www.malaimurasu.co
வேலூர் பதிப்பு

கடவுளும் கந்தசாமியும் பேசும் மொழி தமிழ்

02-05-2020 (சித்திரை- 19) சனிக்கிழமை
★★

ஊரடங்கு மேலும் நீடிப்பு: மத்திய அரசு அறிவித்த கட்டுப்பாடு தளர்வை

தமிழ்நாட்டில் அமல்படுத்த எடப்பாடி ஆலோசனை!

மது விற்பனை, பஸ் போக்குவரத்து பற்றி இன்று முடிவு!!

புதுடெல்லி, மே. 2—

நாடு முழுவதும் ஊரடங்கு மேலும் 2 வாரம் நீடித்தாலும் பெரும்பாலான கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டன. மத்திய அரசு அறிவித்த நடைமுறைகளை தமிழகத்தில் அமல்படுத்துவது குறித்து இன்று முதலமைச்சர் எடப்பாடி ஆலோசனை நடத்தினார். மது விற்பனை, பஸ் போக்குவரத்து, கடை திறப்பு குறித்து இன்று அறிவிக்கப்பட உள்ளது.

மத்திய அரசு நாளையுடன்முடிவடையஉள்ளஊரடங்கை மேலும் 2 வாரங்களுக்கு நீடித்ததாக அறிவித்தது. எனவே மே 17-ந் தேதி வரை ஊரடங்கு நீடிக்கப்படுகிறது. ஆனால் மே 4-ந் தேதி முதல் ஊரடங்கு கட்டுப்பாடுகள் பெரும்பாலும் தளர்த்தப்படுகிறது.

நோய் பாதிப்புக்கு ஏற்ப சிவப்பு, பச்சை, ஆரஞ்சு மண்டலங்களையும்வரையறுத்துள்ளது. அதன்படி, கட்டுப்பாடுகள் தளர்த்தப்படுகின்றன.

அதன்படி, மாநிலங்களுக்குஇடையிலானசாலை போக்குவரத்து, ரெயில், விமானம்,மெட்ரோரெயில் போக்குவரத்து ஆகியவற்றுக்குஅனுமதியில்லை.பள்ளிகள், கல்லூரிகள், இதர கல்வி மையங்கள், பயிற்சி மையங்கள், தங்கும் விடுதிகள்,திரையரங்குகள்,வணிக வளாகங்கள், உடற்பயிற்சி கூடங்கள், விளையாட்டு வளாகங்கள் தொடர்ந்து மூடப்பட்டிருக்கும்.

எடப்பாடி பழனிசாமி

தடை நீடிக்கும்

அனைத்து விதமான சமூக அரசியல், கலாச்சார நிகழ்ச்சிகளுக்கும், வழிபாட்டுத் தலங்களில் மக்களை அனுமதிப்பதற்குமானதடை நீடிக்கும். இரவு 7 மணி முதல்காலை 7 மணி வரை தனிநபர்களின் அத்தியாவசியமற்ற நடமாட்டங்கள் அனுமதிக்கப்படாது.

65 வயதுக்கும் மேற்பட்டோர்மற்றும்10வயதுக்குட்பட்ட குழந்தைகள் மருத்துவ காரணங்கள் தவிர,

3-ம் பக்கம் பார்க்க

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் முதல் கொரோனா பாதிப்பு இன்று உறுதியானது. இந்நிலையில் கிருஷ்ணகிரி பாலாஜி நகர், நல்லத்தம்பி தெருவில் யாரும் செல்லமுடியாத வகையில் போலீசார் தடுப்புகளை அமைத்துள்ளனர்.

இதுவரை பச்சை மண்டலமாக இருந்த கிருஷ்ணகிரி மாவட்டத்தில் முதல் நபருக்கு கொரோனா!

புட்டபர்த்திக்கு சென்று வந்தவர்!!

கிருஷ்ணகிரி, மே. 2—

இதுவரை பச்சை மண்டலமாக இருந்த கிருஷ்ணகிரி மாவட்டத்தில் முதல் கொரோனாபாதிப்புஏற்பட்டுள்ளது.இம்மாவட்டத்தில் உள்ள வேப்பனஹள்ளி அருகே உள்ள நல்லூரை சேர்ந்த விவசாயி புட்டப்பர்த்தி சென்று வந்த பிறகு கொரோனா பாதிப்புக்கு ஆளாகி உள்ளார்.

கிருஷ்ணகிரிமாவட்டம், வேப்பனஹள்ளி அருகே உள்ள நல்லூர் கிராமத்தை சேர்ந்தவர் 67 வயதான விவசாயிஒருவர்தனதுஉறவினர்களான கிருஷ்ணகிரி பழையபேட்டை நல்லதம்பி தெருவை சேர்ந்த ஒருவர் மற்றும் பாலாஜி நகரை சேர்ந்த ஒருவர் ஆகியோர் ஆந்திரா மாநிலம் புட்டப்பர்த்தியில் உள்ள சாய்பாபா கோவிலுக்கு காரில் சென்று வந்தார்.

காவேரிப்பட்டணத்தை சேர்ந்தடிரைவர்காரைஓட்டி சென்றுள்ளார்.இவர்கள்ஊர் திரும்பியவுடன், வெளி மாநிலத்திற்கு சென்று வந்ததாக அருகில் வசிப்பவர்கள் போலீசாருக்கும், வருவாய் துறையினருக்கும் தகவல் தெரிவித்தனர். அதை தொடர்ந்து சுகாதார துறை அதிகாரிகள் விவசாயி, மற்றும் அவரது உறவினர்கள், கார் டிரைவர் உள்பட 3 பேரையும்மருத்துவபரிசோதனைக்கு அழைத்து சென்றனர்.

அதில்விவசாயிக்குகாய்ச்சல் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. அதை தொடர்ந்து 3 பேரின் ரத்த மாதிரிகள் எடுத்து பரிசோதனைக்கு அனுப்பி வைக்கப்பட்டது. அதில் நல்லூரை சேர்ந்த விவசாயிக்கு கொரோனா பாதிப்பு இருப்பது உறுதி செய்யப்பட்டது. இத்தகவலை மாவட்ட சுகாதார பணிகள் துணை இயக்குனர் கோவிந்தன் தெரிவித்தார்.

கொரோனாபாதித்தவிவசாயியுடன், புட்டப்பர்த்தி சென்ற வந்த மற்ற 3 பேரின் ரத்தபரிசோதனைமுடிவுகள் இன்னும்வரவில்லை.அவர்கள் 3 பேர் உள்பட கொரோனா பாதித்த விவசாயியின் உறவினர்கள் 8 பேர் 24 நாட்களுக்கு தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். இவர்கள் வசித்த நல்லூர் மற்றும் கிருஷ்ணகிரி நல்லதம்பி தெரு, பாலாஜி நகர் ஆகிய பகுதிகள்தனிமைப்படுத்தப்பட்டபகுதியாகஅறிவிக்கப்பட்டு கிருமிநாசினி மருந்து தெளிக்கும்பணியில்சுகாதாரத்துறையினர்தீவிரம்காட்டி வருகிறார்கள்.

ஊரடங்கு உத்தரவு அமலில்உள்ளநேரத்தில்புட்டப்பர்த்திக்குசென்றுவந்தவிவசாயி உள்பட 4 பேர் மீதும் வேப்பனஹள்ளி போலீசார் ஊரடங்கு உத்தரவை மீறியதாக வழக்குப்பதிவு செய்துள்ளனர்.

கொரோனா பாதிக்கப்பட்ட பகுதிகள் மத்திய அரசால்சிவப்பு,ஆரஞ்சு,பச்சை நிறமாக அடையாளம் காட்டப்பட்டு வருகிறது.

இதுவரை கொரோனா பாதிப்பு இல்லாத பச்சை மண்டல பகுதியாக இருந்து வந்த கிருஷ்ணகிரி மாவட்டத்தில் வேப்பனஹள்ளி விவசாயி பாதிக்கப்பட்டிருப்பதன் மூலம் முதல் கொரோனாதொற்றுபாதிப்பு ஏற்பட்டிருப்பதுஉறுதியாகி உள்ளது.

ஊரடங்கை மீறி வெளியே வரும் மக்கள் மீது போலீசார் நடவடிக்கை எடுத்து வருகின்றனர். சில இடங்களில் நூதன தண்டனை வழங்கப்படுகிறது. அந்த வகையில் பஞ்சாப் மாநிலம் லுதியானாவில் வெ ளியே வந்த நபர்களை போலீசார் பிடித்து அவர்களுக்கு மாலை அணிவித்து, வீட்டுக்குச் செல்லுங்கள் என்று அன்போடு அறிவுரை வழங்கி வருகின்றார்கள்.

புலம்பெயர்ந்த தொழிலாளர்களுக்காக 5 சிறப்பு ரெயில்கள் இயக்கம்!

ஆயத்த நிலையில் மேலும் பல தொடர்வண்டிகள்!!

புதுடெல்லி, மே. 2—

புலம்பெயர்ந்ததொழிலாளர்களுக்காக 5 சிறப்பு ரெயில்கள்இயக்கப்பட்டுள்ளன. மேலும் பல தொடர் வண்டிகள் ஆயத்த நிலையில் உள்ளன.

கொரோனாவைரஸ்தாக்கம் இந்திய பொருளாதாரத்தை தடம் புரள வைத்து விட்டது. குறிப்பாக, புலம் பெயர்ந்த தொழிலாளர்கள் வாழ்வாதாரத்தை பறிகொடுத்துவிட்டுநிராதரவாகநிற்கிறார்கள்.

அவர்களுக்கு தற்காலிகமாக உதவி செய்யப்பட்டு வருகிறது என்ற போதிலும், இதைநெடுங்காலம்நீட்டிப்பதுசாத்தியமல்ல.தற்காலிக தொழிலாளர்கள் சொந்த மாநிலங்களுக்கு திரும்ப விரும்புகிறார்கள்.

அண்மையில்இதற்குமத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா பச்சைக்கொடி காட்டிவிட்டார்.

ஏற்கனவே புலம் பெயர்ந்த தொழிலாளர்கள் பேருந்துகளில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். ஆனால் இது போதுமானதல்ல.

சிறப்பு ரெயில்களை இயக்கினால் மட்டுமே புலம் பெயர்ந்த தொழிலாளர்களை பெருமளவில் சொந்த மாநிலங்களுக்கு அனுப்பி வைக்க முடியும் என்பதை பல்வேறு மாநில முதல்வர்களும் நன்கு உணர்ந்துள்ளனர். இது தொடர்பாக, மத்திய அரசை மாநில முதல்வர்கள் பலர் வற்புறுத்தினர்.

அனுமதி

இதையடுத்து மத்திய அரசு சிறப்பு ரெயில்களை இயக்க வரைவு திட்டத்தை தயாரித்துள்ளது. முதல்கட்டமாக 400 சிறப்பு ரெயில்கள் இயக்கப்படும். வழக்கமாக ஒரு ரெயிலில் சுமார் 2,000 பேர் செல்ல முடியும்.

ஆனால்இப்போதுசமூக இடைவெளியை கடைபிடிக்க வேண்டியுள்ளதால், ஒரு ரெயிலில் சுமார் 1,000 பேர் மட்டுமே பயணிக்க அனுமதிக்கப்படுவார்கள் என்றுரெயில்வேதுறைதெரிவித்துள்ளது.

இந்நிலையில்,இதுவரை 5 சிறப்பு ரெயில்கள் இயக்கப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.லிங்கம் பள்ளி – ஹதியா, அலுவா – புவனேஸ்வரம், நாசிக் – போபால், ஜெய்ப்பூர் – பாட்னா, கோட்டா–ஹதியா ஆகிய 5 வழித்தடங்களில் மட்டுமே முதல்கட்டமாக சிறப்பு ரெயில்கள்இயக்கப்பட்டுள்ளன.

இப்போதுஊரடங்குஇம் மாதம் 17-ந் தேதி வரை நீட்டிக்கப்பட்டுள்ளதால், மேலும் பல சிறப்பு ரெயில்கள்இயக்கவேண்டியநிலை உருவாகியுள்ளது.

எனவே மேலும் பல தொடர்வண்டிகள் ஆயத்த நிலையில்வைக்கப்பட்டுள்ளன என்று கடைசியாக கிடைத்த தகவல் தெரிவிக்கிறது.

தனியாக பாஸ் தேவையில்லை: தடையற்ற லாரி போக்குவரத்தை மாநில அரசு உறுதி செய்ய வேண்டும்!

உள்துறை அமைச்சகம் கடிதம்!!

புதுடெல்லி, மே. 2—

கொரோனா தொற்று நோய் பரவலை தடுக்கும் வகையில் மே 17ந்தேதி வரை மேலும் 2 வாரங்களுக்குஊரடங்கு3வதுமுறையாகநீட்டிக்கப்பட்டுள்ளது.

மாநிலங்களுக்கு இடையிலான சாலை போக்குவரத்து மற்றும் ரெயில், விமானப் போக்குவரத்துக்கான தடை தொடர்ந்து அமலில் இருக்கும் என்று கூறப்பட்டுள்ள நிலையில் ஊரடங்கு முறையில் பல்வேறுகட்டுப்பாடுகள்தளர்த்தப்பட்டுள்ளன.

அதன்படி, மாநிலங்களிடையேதடையற்றலாரிஉள்ளிட்டகனரகசரக்குவாகனங்களின் போக்குவரத்தை உறுதி செய்ய வேண்டும் என்று மாநில அரசுகளுக்கு, மத்திய உள்துறை அமைச்சகம் அறிவுறுத்தியுள்ளது.

பல்வேறுமாநிலஎல்லைகளில்கனரகவாகனங்களை அனுமதிப்பதில் உள்ளூர் அதிகாரிகள் கெடுபிடி காட்டுவதாகஎழுந்தபுகார்களைத் தொடர்ந்துமத்தியஉள்துறை அமைச்சகசெயலாளர்அஜய் பல்லா மாநில அரசுகளுக்கு அறிக்கைஒன்றைவெளியிட்டுள்ளார்.

அதில் அவர் கூறியதாவது:—

அனைத்து லாரிகளையும், சரக்கு ஏற்றிச் செல்லும் கனரக வாகனங்களையும் மாநிலங்கள் இடையே சென்று வர அனுமதிக்க வேண்டும். சரக்குகளை ஏற்றிச் செல்லும் போதும் சரி, சரக்குகளை இறக்கி விட்டு காலியாகதிரும்பும்போதும் சரி, லாரி போக்குவரத்துக்கு தனியாக 'பாஸ்' அல்லது அனுமதி கடிதத்தை அதிகாரிகள் கேட்கக் கூடாது.

ஓட்டுனரின் உரிமமே போதுமானதுஊரடங்குஅமலில் இருக்கும் நிலையில் தங்கு தடையற்ற சரக்கு போக்குவரத்தை அனுமதிக்க வேண்டும்.

2 டிரைவர்கள், ஒரு உதவியாளர் என வாகனங்களில் 3 பேர் இருக்கலாம். டிரைவர்கள் கண்டிப்பாக ஓட்டுனர் உரிமம் வைத்திருக்க வேண்டும் இது தொடர்பாக மாவட்ட நிர்வாகங்களுக்கு தேவையான அறிவுரையை மாநிலஅரசுகளும், யூனியன் பிரதேச நிர்வாகங்களும் வழங்க வேண்டும்.

இவ்வாறு கூறப்பட்டுள்ளது.

24 மணி நேரத்தில் கொரோனாவுக்கு 71 பேர் பலி

புதுடெல்லி, மே. 2—

கடந்த 24 மணி நேரத்தில் கொரோனா பாதிப்புக்கு இந்தியாவில் 71 பேர் பலியாகி உள்ளனர்.

இந்தியாவில் தற்போது கொரோனா தடுப்பு நடவடிக்கைகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன. இந்த நிலையில் கடந்த 24 மணி நேரத்தில் நாட்டில் கொரோனா பாதிப்புக்கு 71 பேர் பலியாகி உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. 2,293 பேர் புதிதாக பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 24 மணி நேரத்தில் 71 பேர் பலியான சம்பவம் நாட்டின் உச்சக்கட்ட பாதிப்பாக கூறப்படுகிறது. இந்த தகவலை மத்திய சுகாதாரத் துறை அமைச்சகம் அறிவித்துள்ளது. இதனால் இந்தியாவில் கொரோனாவினால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 37,336-யை தாண்டியுள்ளது. இதுவரை, 1,223 பேர் பலியாகி உள்ளனர்.

பிறந்த நாள் கேக் வெட்ட

காதலன் வராததால் பெண் போலீஸ் தற்கொலை!

சென்னை, மே. 2–

பிறந்தநாள் கேக் வெட்ட காதலன் வராததால் பெண் போலீஸ்காரர் ஒருவர் தூக்கு போட்டு தற்கொலை செய்து கொண்டார்.

சென்னை அயனாவரம் பகுதியைச் சேர்ந்தவர் சரண்யா (வயது 21). இவர் ரெயில்வே பெண் காவலராக பணிபுரிந்து வந்தார். தற்போது கொரோனா தடுப்பு பணிக்காக எஸ்பிளனேடு காவல் நிலையத்தில் பணியாற்றினார்.

இவர் தமிழ்நாடு சிறப்பு காவல்படையைச் சேர்ந்த ஒரு காவலரை காதலித்து வந்ததாக கூறப்படுகிறது.

வாக்குவாதம்

நேற்று அந்த காவலருக்கு பிறந்தநாள் ஆகும். ஆகவே சரண்யா, அயனாவரத்தில் உள்ள தனது வீட்டுக்கு அருகே கேக்குடன் காத்திருந்தார்.

ஆனால் காதலர் வரவில்லை எனச் சொல்லப்படுகிறது. இதனையடுத்து, சரண்யா, போன் மூலம் தொடர்பு கொண்டு பேசியுள்ளார். அப்போது இருவருக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டதாக கூறப்படுகிறது.

இதனால் மன உளைச்சலுக்கு உள்ளான சரண்யா வீட்டில் துப்பட்டாவால் தூக்குப்போட்டு தற்கொலை செய்து கொண்டார். தகவல் அறிந்து சம்பவ இடத்திற்கு வந்த ஓட்டேரி போலீசார் சரண்யாவின் உடலை பிரேத பரிசோதனைக்காக கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

தெலுங்கானாவில் இருந்து

ஜார்க்கண்டுக்கு சிறப்பு ரெயில்!

1,200 பேர் புறப்பட்டு சென்றனர்!!

ஐதராபாத், மே. 2–

தெலுங்கானாவில் இருந்து 1,200 தொழிலாளர்கள் சிறப்பு ரெயில் மூலம் ஜார்க்கண்டுக்கு புறப்பட்டுச் சென்றனர்.

ஊரடங்கு காரணமாக பல்வேறு மாநிலங்களிலும், ஏராளமான தொழிலாளர்கள் வருவாய் இன்றி முடங்கிக் கிடக்கின்றனர். சில மாநிலங்களில் வேறு மாநில தொழிலாளர்கள் சிக்கி உள்ளனர். அவர்களை அவரவர் சொந்த மாநிலங்களுக்கு அழைத்துச் செல்ல மத்திய அரசு அனுமதி வழங்கியுள்ளது.

அதன்படி பஸ்களை ஏற்பாடு செய்து கொள்ளலாம் என அறிவித்துள்ளது.

ஆனால், பஸ்கள் மூலம் குறைந்த அளவிலேயே பயணிகளை ஏற்றிச் செல்ல முடியும் என்பதால் சிறப்பு ரெயில்களை இயக்க வேண்டும் என மாநில அரசுகள் கோரிக்கை விடுத்தன.

அதை ஏற்று ரெயில்வே அமைச்சகம் 400 ரெயில்களை இயக்க தீர்மானித்திருப்பதாக செய்தி வெளியானது.

இந்த நிலையில் தெலுங்கானா மாநிலம் லிங்கம் பள்ளி என்ற இடத்தில் சிக்கித் தவித்த 1,200 ஜார்க்கண்ட் தொழிலாளர்கள், 24 பெட்டிகள் அடங்கிய ரெயில் மூலம் ஹாதியா என்ற நகருக்கு அழைத்துச் செல்லப்பட்டார்கள்.

வேலூர் தொரப்பாடி பகுதியில் வசித்து வரும் மேக்னா என்ற சிறுமி, தனது பிறந்த நாளை முன்னிட்டு அந்தப் பகுதியில் கொரோனா தடுப்பு பணியில் ஈடுபடும் காவலர்களுடன் இணைந்து கேக் வெட்டி கொண்டாடி மகிழ்ந்த காட்சி.

டெல்லியில்

கொரோனா நோயாளிகள் அதிகரிக்க காரணம் என்ன?

முதல்வர் கேஜ்ரிவால் விளக்கம்!

புதுடெல்லி, மே. 2–

டெல்லியில் அதிகளவிலான கொரோனா பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக கூறியுள்ள அம்மாநில முதல்வர் அரவிந்த் கேஜ்ரிவால், அதன் காரணமாகவே கொரோனா நோயாளிகளின் எண்ணிக்கையும் அதிகரித்து வருகிறது என்று கூறியுள்ளார். டெல்லியில் நேற்று ஒரே நாளில் 223 பேருக்கு கொரோனா நோய்தொற்று பாதிப்பு கண்டறியப்பட்டது. இதையடுத்து அங்கு கொரோனாவால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 3,738 –ஆக அதிகரித்துள்ளது.

டெல்லியில் 10 லட்சம் பேருக்கு 2,300 டெஸ்ட் வீதம் அங்கு கொரோனா பரிசோதனை செய்யப்படுகிறது. இது தேசிய அளவில் மேற்கொள்ளப்படும் பரிசோதனைகளின் சராசரியைக் காட்டிலும் அதிகமாகும். நேற்று செய்தியாளர்களுக்கு பேட்டியளித்த டெல்லி முதல்வர் கேஜ்ரிவால் கூறியதாவது, டெல்லி அரசு அதிகளவிலான மக்களுக்கு கொரோனா பரிசோதனை செய்து வருகிறது.

இதன் மூலம் கொரோனாவால் பாதிக்கப்பட்டவர்களை முழுமையாக அடையாளம் காண முடியும். இதுவரை மருத்துவமனைகளில் சிகிச்சைப் பெற்று வந்த 1,094 பேர் குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர். டெல்லியில் முதன்முதலில் பிளாஸ்மா சிகிச்சை அளிக்கப்பட்ட 49 வயது நபருக்கு பலன் கிடைத்துள்ளது.

ஐ.சி.யு பிரிவில் உடல் நிலை மோசமடைந்த நிலையில் இருந்தவர் தற்போது குணமடைந்து வீடு திரும்பியுள்ளார்.

மத்திய அரசின் ஒப்புதல் பெற்றே இந்த சிகிச்சை அளிக்கப்பட்டது. சோதனை அடிப்படையில் மேற்கொள்ளப்படும் பிளாஸ்மா சிகிச்சை தொடர்ந்து அளிக்கப்படும். கொரோனாவில் இருந்து குணமடைந்த அனைவரும் பிளாஸ்மா சிகிச்சைக்கு தானம் செய்ய ஒப்புக் கொண்டுள்ளனர். ராஜஸ்தான் மாநிலம் கோட்டாவில் சிக்கியுள்ள மாணவர்களை அழைத்து வர டெல்லி அரசு சார்பில் 40 பேருந்துகள் இன்று அனுப்பி வைக்கப்படுகிறது. டெல்லி மக்களுக்கு இம்மாதமும் 10 கிலோ ரேஷன் பொருட்கள் கூடுதலாக வழங்கப்படும்.

இவ்வாறு அவர் கூறினார்.

நலம் தரும் நட்சத்திரங்கள்

ஜோதிட ரத்னா லியோ தங்கம் 044-26533241

02-05-2020 முதல் 08-05-2020 வரை

அசுவதி: செய்ய வேண்டிய வேலைகளில் அதிக கவனம் தேவைப்படும் நாள் சுயமுயற்சியால் விரும்பும் பலன்களை பெறலாம். கணவன், மனைவி இருவரும் சேர்ந்து அமைதியுடன் செயல்பட வேண்டும்.

பரணி: மனதில் அமைதியுடன் குடும்ப வேலைகளை எல்லாம் கவனிக்க வேண்டும். வேலைதேடும் முயற்சிகளில் கவனம் அவசியம். புதுப்பொறுப்புகளை ஏற்க மட்டும் இப்போது அவசரப்பட வேண்டாம்.

கார்த்திகை: வேகப்படாமல் விவேகத்துடன் எல்லா வேலைகளையும் கவனமாக செய்ய வேண்டும். பள்ளிகளின் வேலைகளை நல்ல நிலையில் செய்து முடிக்கலாம். குரு அருளால் குடும்பம் உயர்வு பெறும்.

ரோகிணி: விரும்பும் வசதியும் வாழ்வில் பெறலாம். மனதில் சந்தேகம் ஏற்படும் வேலைகளை எல்லாம் தவிர்க்க வேண்டும். வேலை தேடும் முயற்சிகளில் அதிகம் கவனம் தேவைப்படும் நேரம்.

மிருகசீரிஷம்: எதிர்பாராமல் செயல்களில் வேகம் ஏற்படும். பரம்பரை சொத்தும் சேரும். குடும்ப வேலைகளையும் சற்று அமைதியாக கவனிப்பது அவசியம்.

திருவாதிரை: வேலைதேடும் அன்பர்கள் செய்யும் முயற்சிகளை வேகப்படுத்த வேண்டும். நண்பர்கள் உதவியால் வாழ்வில் உற்சாகம் ஏற்படும். எதிர்ப்புகள் போட்டிகளில் கவனம் செலுத்த வேண்டாம்.

புனர்பூசம்: எப்போதும் போல் நிதானமாக செயல்பட வேண்டிய வாரம். வேலை தேடும் முயற்சிகளில் கவனம் தேவை. குடும்பம் மற்றும் வெளிவட்டார பழக்கம் போன்ற நிலைகளில் மட்டும் வீண் வாதங்களை எல்லாம் குறைக்க வேண்டும்.

பூசம்: வார ஆரம்ப நாட்களில் குடும்ப வேலைகளில் அதிகம் கவனம் தேவை. வாழ்வில் விரும்பும் வசதிகளையும் பெறலாம். பெரிய மனிதர்களின் ஆதரவால் மனதில் நிம்மதி ஏற்படும்.

ஆயில்யம்: சரியான திட்டம்போட்டு சுய முன்னேற்ற வேலைகளை கவனிக்க வேண்டும். கிடைக்கும் வாய்ப்புகளை எல்லாம் தாமதம் இல்லாமல் பயன்படுத்த வேண்டும்.

மகரம்: வார ஆரம்ப நாட்களில் நிதானமாக செயல்பட வேண்டும். புது முயற்சிகளில் கவனம் செலுத்த வேண்டாம். குடும்ப வேலைகளை மட்டும் பொறுப்புடன் கவனிக்க வேண்டும்.

பூரம்: ஏற்கனவே செய்யும் வேலைகளில் நல்ல பலன்களை பெறலாம். எதிர்பாராமல் மனதில் துணிச்சல் ஏற்படும். வேலை தேடும் அன்பர்கள் மட்டும் சற்று பொறுப்புடன் செயல்படவேண்டும்.

உத்திராடம்: செய்யும் வேலைகள் எல்லாம் தாமதம் இல்லாமல் செய்து விட வேண்டும். சுய முன்னேற்றம் காரணம் பெரிய செலவுகளும் ஏற்படும். புதுப் பொருள்களும் சேரும்.

அஸ்தம்: செய்ய வேண்டிய வேலைகளை எல்லாம் பொறுப்புடன் கவனிக்க வேண்டும். பிள்ளைகளின் செயல்களால் குடும்பம் உயர்வு பெறும். தொழில் தொடர்பு போட்டிகளில் வெற்றி பெறலாம்.

சித்திரை: அவசரப்படாமல் சற்று நிதானமாக செயல்பட வேண்டும். கணவன், மனைவி இருவரும் குடும்ப நிலையில் வீண் வாதங்களை எல்லாம் குறைக்க வேண்டும். பரம்பரை சொத்தும் சேர சுக்கிரன் உதவி செய்வார்.

சுவாதி: புதுமுயற்சிகளில் மட்டும் இப்போது கவனம் செலுத்த வேண்டாம். எண்ணம் எல்லாம் நல்ல நிலையில் நிறைவேறும். தொழில் தொடர்பு போட்டிகளில் தலையிட வேண்டாம்.

விசாகம்: சுய முன்னேற்ற நிலையில் அதிக கவனம் செலுத்த வேண்டும். குடும்ப பெரியவர்களின் ஆதரவும் கிடைக்கும். வார ஆரம்ப நாட்களில் மட்டும் நிதானமாக செயல்பட வேண்டும்.

அனுசம் சுய முயற்சியால் விரும்பும் வசதிகளை பெறலாம். செய்யும் வேலைகளில் ஏற்பட்ட தடைகள் விலகிவிடும். புதுப் பொறுப்புகள் ஏற்கும்போது கவனம் தேவை.

கேட்டை மனப்பதற்றம் எல்லாம் நீங்கிவிடும். செய்யும் வேலைகளால் வாழ்வில் உற்சாகம் ஏற்படும். குடும்ப வேலைகளை மட்டும் பொறுப்புடன் கவனிக்க வேண்டும். விரும்பும் வசதியை பெறலாம்.

மூலம்: எதிர்பாராமல் மனதில் துணிச்சல் ஏற்படும் நண்பர்கள் மூலம் வேண்டிய உதவிகள் கிடைக்கும். புதுப்பொறுப்புகளை ஏற்க மட்டும் அவசரப்பட வேண்டாம். குரு அருளால் குடும்பச் செல்வாக்கும் உயரும்.

பூராடம்: குழப்பம் இல்லாமல் சரியான யோசனை செய்து செயல்பட வேண்டிய நேரம். குடும்ப வேலைகளை நல்ல நிலையில் செய்து முடிக்கலாம் வார ஆரம்ப நாட்களில் மட்டும் அமைதியுடன் எல்லா வேலைகளையும் கவனிக்க வேண்டும்.

உத்திராடம்: பிள்ளைகளின் முன்னேற்றத்தில் அதிக கவனம் செலுத்த வேண்டும் சொந்த நிலையில் பெரிய செலவுகள் ஏற்படும் எதிர்ப்புகள், போட்டிகளில் இப்போது தலையிட வேண்டாம்.

திருவோணம்: செய்ய முடியாமல் தாமதப்பட்ட வேலைகளை மட்டும் முதலில் கவனிப்பது அவசியம் வேலை தேடும் முயற்சிகளில் கவனம் தேவை. குடும்ப நிலையில் வீண்வாதங்களை எல்லாம் குறைக்க வேண்டும்.

அவிட்டம்: வேலை தேடும் அன்பர்கள் செய்யும் முயற்சிகளில் நிச்சயம் வெற்றி பெறுவார்கள். வார ஆரம்ப நாட்களில் மட்டும் நிதானமாக செயல்பட வேண்டும் விருப்பம் எல்லாம் சிறப்புடன் நிறைவேறும்.

சதயம்: வார பிற்பகுதியில் மட்டும் அமைதியுடன் செயல்பட வேண்டும் பிள்ளைகளின் வேலைகளில் அதிக கவனம் தேவை. வேலை தேடும் அன்பர்கள் செய்யும் முயற்சிகளில் கவனம் தேவை.

பூரட்டாதி: செய்ய வேண்டிய வேலைகளை எல்லாம் சொந்தப் பொறுப்பில் கவனிக்க வேண்டும் எப்போதும் போல் சுயமுன்னேற்றத்தில் அதிக கவனம் தேவை. குடும்ப நிலையில் அமைதியுடன் இருப்பதும் அவசியம்.

உத்திரட்டாதி: ஏற்கெனவே செய்யும் வேலைகளில் அதிக கவனமாக இருக்க வேண்டிய நேரம். வார பிறபகுதியில் சிலசமயம் உங்கள் செயல்களில் வீண்குழப்பம் ஏற்படலாம் எதிர்ப்புகள் போட்டிகளில் மட்டும் தலையிட வேண்டாம்.

ரேவதி குடும்ப பிரச்சினைகளில் நிதானம் காட்ட வேண்டும். பதறாத காரியம் சிதறாது என்பதற்கு இணங்க பிணக்கை தவிர்த்து பிணைப்பை வலுப்படுத்த நடவடிக்கை எடுத்தால் வசந்த விடியல் உதயமாகும்.

144 தடை நீடிப்பதால்

5 பேருக்கு மேல் கூடினால் கடும் நடவடிக்கை!

போலீஸ் எச்சரிக்கை!!

சென்னை, மே. 2–

144 தடை உத்தரவு நீடிப்பதால் 5 பேருக்கு மேல் கூடினால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று தமிழக காவல்துறை எச்சரிக்கை விடுத்துள்ளது.

தமிழ்நாட்டில் மார்ச் 24–ம் தேதி மாலை 6 மணி முதல் 144 தடை உத்தரவு நடைமுறைக்கு வந்தது. இதன்படி ஒரே இடத்தில் 5 பேருக்குமேல்கூடக்கூடாது எனதடைவிதிக்கப்பட்டது.

அன்றைய தினம் நள்ளிரவு 12 மணி முதல் ஊரடங்கு உத்தரவும் அமலுக்கு வந்தது.

இந்த இரண்டும் தொடர்ந்து நீட்டிக்கப்பட்டு வருகின்றது. தற்போது, ஊரடங்கு காலம் மே 17 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் தமிழக காவல் துறை இயக்குனர் அலுவலகம் சார்பில் ஓர் அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

அதில் கூறப்பட்டிருப்பதாவது:–

“நமது மாநிலத்தில் ஏற்பட்டுள்ள கொடிய கொரோனா தொற்று நோய் மேலும் பரவாமல் தடுக்க மத்திய அரசும், தமிழக அரசும் தொடர்ந்து பல நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன. பொதுமக்களின் பாதுகாப்பு கருதி தமிழகம் முழுவதும் 144 குற்றவியல் நடைமுறைச் சட்டம் பிரகடனப்படுத்தப்பட்டு, அரசு நிர்வாகம் பல நிபந்தனைகளைக் கடைபிடிக்கப் பொதுமக்களுக்குத் தொடர்ந்து அறிவுரைகளை வழங்கி வந்துள்ளது.

பிரகடனம்

144 தடை உத்தரவு பிரகடனப்படுத்தப்பட்ட பிறகும், பொதுமக்களில் பலர் அதன் சட்ட விதிமுறைகளைச் சரிவரக் கடைபிடிக்காமலும், சமூக இடைவெளியைத் தவிர்த்தும், உத்தரவுகளை மீறிச் செயல்பட்டு வருகின்றனர். இத்தடை உத்தரவுப்படி ஐந்து நபர்களுக்கு மேல் எந்த இடத்திலும் எக்காரணத்திற்காகவும் கூடுவது சட்ட விரோதமானது. இச்சட்டம் அனைத்து சமூக, சமய மற்றும் மதம் சார்ந்த விழாக்கள், வழிபாடுகள் மற்றும் கூட்டங்களுக்கும் முழுமையாகப் பொருந்தும். ஆகவே பொதுமக்கள் 144 தடை உத்தரவு நடைமுறைகளை எக்காரணம் கொண்டும் மீறாமல் கடைப்பிடிக்க வேண்டும் என்று தமிழகக் காவல் துறை மீண்டும் வலியுறுத்துகிறது.

இனி 144 தடை உத்தரவு மீறி, ஐந்து நபர்களுக்கு மேல், எந்த இடத்திலும் எவ்வித காரணங்களுக்காகவும் பொதுமக்கள் கூடினால் சம்பந்தப்பட்டவர்கள் மீது மிகக் கடுமையான சட்டப்பூர்வமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று எச்சரிக்கப்படுகிறார்கள்.

ஆகவே பொதுமக்கள் சட்டவிதிகளை மீறுவதைத் தவிர்த்து, இக்கொடிய தொற்று நோயை முழுமையாகக் கட்டுப்படுத்துவதற்குத் தமிழக காவல்துறையினருடன் முழுமையாக ஒத்துழைக்க வேண்டும்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கே.வி குப்பம் மலைப்பகுதியில் கள்ளச்சாராய ஊறல் கண்டுபிடிக்கப்பட்டது. மதுவிலக்கு போலீசார் அதனை அழித்த காட்சி.

தினமும் மாலைமுரசு படியுங்கள்

கொரோனா வைரஸ்

சீன ஆய்வகத்தில் இருந்துதான் கசிந்தது!

ஆதாரம் இருப்பதாக டிரம்ப் மீண்டும் குற்றச்சாட்டு!!



டிரம்ப்

வாஷிங்டன், மே. 2–

கொரோனா வைரஸ் சீனாவின் வூகான் ஆய்வத்தில் இருந்துதான் வெளிப்பட்டுள்ளது என அமெரிக்க அதிபர் டிரம்ப் மீண்டும் குற்றம் சாட்டியுள்ளார்.

தற்போது உலகை ஆட்டிப்படைத்து வரும் கோவிட்–19 என்ற கொரோனா வைரஸ், சீனாவின் வூகான் நகரில் தான் முதன் முதலில் பரவியது. அதன் பிறகு மற்ற நாடுகளுக்கு பறந்தது.

வூகான்நகரில் உள்ள மீன் மார்க்கெட்டில் இருந்து இந்த வைரஸ் கிருமி இயற்கையாக தோன்றியதாக சீனா கூறியது. ஆனால், சீன ஆய்வகத்தில் செயற்கையாக உருவாக்கப்பட்ட போது இந்த கிருமி கசிந்து விட்டதாக அமெரிக்க அதிபர் டொனால்டு டிரம்ப் அடுத்தடுத்து கூறினார்.

சில விஞ்ஞானிகளும் அவரது கருத்தை ஆமோதித்தனர். இந்தநிலையில் வூகான் நகர ஆய்வகத்தில் இருந்து கொரோனா வெளிப்பட்டதற்கான ஆதாரம் இருப்பதாக அதிபர் டிரம்ப் கூறியுள்ளார்.

வூஹான் நுண்மியியல் ஆய்வகத்திலிருந்துதான் கொரோனா நோய்த் தொற்று பரவியது என்பதில் எனக்கு ஆணித்தரமான நம்பிக்கை உள்ளது.

இதுதொடா்பான முழு விபரங்களை என்னால் தற்போது வெளியிட முடியாது. அதற்கான அனுமதி எனக்குக் கிடையாது.

ஆனால், கொரோனா நோய்த்தொற்று வூஹான் ஆய்வகத்திலிருந்துதான் பரவியது என்பதை என்னால் உறுதியாகக் கூற முடியும்.

இந்த வைரசை உலகம் முழுவதும் பரவாத வகையில் சீனாவால் தடுத்திருக்க முடியும்.

ஆனால்அந்தநாடு அதை செய்யவில்லை. ஆகவே, உலக நாடுகளில் ஏற்பட்டுள்ள பாதிப்புகளுக்கு சீனா தான் பொறுப்பேற்க வேண்டும். இதனால்ஏற்பட்டுள்ள உயிர் இழப்புகளுக்கும், பொருளாதார இழப்புகளுக்கும் அந்த நாடு இழப்பீடு தரவேண்டும்.

எங்களுக்கு ஏற்பட்டுள்ள இழப்பை வேறு விதமாக சீனாவிடம் இருந்து நாங்கள் வசூலிப்போதும். அது தொடர்பான எங்களது விளையாட்டுகளை விரைவில் தொடர்வோம்.

இவ்வாறு டிரம்ப் கூறினார்.

கொரோனாவுக்கு சிகிச்சை அளிக்க

தேசிய சித்த மருத்துவ மையம் தயாராகிறது!

தாம்பரம், மே. 2–

கொரோனாவால் பாதிக்கப்பட்டவர்களுக்கு சிகிச்சை அளிக்க, தேசிய சித்த மருத்துவ நிறுவனத்தில், டாக்டர்கள் தயார் நிலையில் உள்ளனர் என, நிறுவனத்தின் இயக்குனர், மீனாகுமாரி தெரிவித்துள்ளார்.

தாம்பரம் சானடோரியத்தில் உள்ள, தேசிய சித்த மருத்துவ நிறுவனத்தின், இயக்குனர் மீனாகுமாரி வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

கொரோனா வைரஸ் தாக்காமல் இருக்க, உடல் வலிமையையும், நோய் தடுப்பாற்றலையும் அதிகரிக்கும் வகையிலான, உணவு வகைகளின் தொகுப்புகள், நிறுவனத்தின் இணையதளத்தில் பதிவிடப்பட்டுள்ளன. இதை, பின்பற்றி மக்கள் தங்களை தற்காத்துக் கொள்ளலாம்.

மொத்தம், 270 டாக்டர்கள் மற்றும் சித்த மருத்துவ பட்ட மேற்படிப்பு மாணவர்கள், பயிற்சி பெற்று, கொரோனாவால் பாதிக்கப்பட்ட பகுதிகளில், பணிபுரிய தயாராக உள்ளனர்.

கொரோனாவுக்கு மருந்து கண்டுபிடிக்கும் விதமாக, ‘சார்ஸ்’ வைரசின் புரதத்துடன், 15 வகையான சித்த மருந்துகளை இணைத்து சோதனை செய்ததில், நல்ல முடிவு கிடைத்துள்ளது. இது தவிர, சித்த மருத்துவத்தில், கொடிய ஜுரங்களுக்கு கொடுக்க கூடிய, கபசுரக் குடிநீர் உட்பட, ஐந்து வகையான குடிநீர்களை, விலங்குகளுக்கு கொடுத்து சோதிக்கும், ஆராய்ச்சிகளும் நடந்து வருகின்றன. விரைவில், இந்த ஆராய்ச்சிகள் இறுதி வடிவம் பெற்று, நல்ல முடிவு கிடைக்கும் என, நம்புகிறோம். இவ்வாறு அவர் கூறினார்.

திருப்பத்தூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் ஆரோக்கிய சிறப்பு திட்டத்தை தொடங்கி வைத்து, கபசுரக் குடிநீர் மற்றும் நிலவேம்பு பவுடரை கலெக்டர் சிவனருள் வழங்கிய காட்சி. அருகில் சித்த மருத்துவ அலுவலர் விக்ரம் உள்ளார்.

சிவப்பு மண்டலம் உட்பட அனைத்து பகுதிகளிலும்

மதுக்கடைகளை திறக்க மத்திய அரசு அனுமதி!

சீல் வைக்கப்பட்ட பகுதிகளில் மட்டும் விற்பனைக்கு தடை!!

புதுடெல்லி, மே. 02–

சிவப்பு மண்டலம் உட்பட அனைத்து பகுதிகளிலும் மதுக்கடைகளை திறக்க மத்திய அரசு அனுமதியளித்துள்ளது. மத்திய அரசு நேற்று மே 4–ந் தேதியில் இருந்து நாடு முழுவதும் பல்வேறு பகுதிகளில் ஊரடங்கு தளர்த்தி உத்தரவிட்டது.

இது தொடர்பாக மத்திய உள்துறை அமைச்சகம் வெளியிட்ட அறிக்கையில் மதுக்கடைகளை நிபந்தனையுடன் திறக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது. சிவப்பு, ஆரஞ்சு, பச்சை மண்டலங்களில் நிபந்தனையுடன் மதுக்கடைகள் திறக்க அனுமதிக்கப்படும். சிவப்பு மண்டலங்களில் சீல் வைக்கப்பட்ட பகுதிகளில் மதுக் கடைகளை திறக்க முடியாது. நகர்ப்புறங்களில் வணிக வளாகங்கள், சந்தைகள் அல்லாத பகுதிகளில் செயல்படும் மதுக்கடைகளில் மது விற்பனைக்கு அனுமதி அளிக்கப்படுகிறது. மது வாங்க வருவோர் இடையே 6 அடி சமூக இடைவெளி இருப்பதையும், ஒரே நேரத்தில் 5 பேருக்கு மேல் அனுமதிக்கப்படாததையும் ஊழியர்கள் உறுதி செய்ய வேண்டும். அதே சமயம், பொது இடங்களில் மது அருந்தவோ, பான், குட்கா போன்ற புகையிலைப் பொருட்களை பயன்படுத்தவோ அனுமதி இல்லை என்று மத்திய உள்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

ஆனால் தமிழக அரசு இன்று நடக்கும் ஆலோசனைக்கு பிறகு இதை அமல்படுத்துவது குறித்து முடிவு எடுக்கும்.

வேலூர் ஆந்திர எல்லை பகுதியான கிறிஸ்தியான் பேட்டை எல்லைப்பகுதியில் உயர் கோபுரம் அமைத்து பாதுகாப்பு பணியில் ஈடுபடும் போலீசாரை படத்தில் காணலாம்

கொரோனா பேரிடரில் சிக்கித் தவிப்பு:

மும்பையில் வாழும் தமிழர்களை தமிழகம் அழைத்து வரவேண்டும்!

மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!!

சென்னை, மே. 02–

மும்பையில் வசிக்கும் தமிழர்களுடன் மு.க.ஸ்டாலின் காணொலிக் காட்சி மூலம் உரையாடினார். மும்பையில் சிக்கியுள்ள தமிழர்களை மீட்க உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று பிற மாநிலங்களில் சிக்கியுள்ள தமிழர்களை மீட்க சிறப்பு அதிகாரியாக நியமனம் செய்யப்பட்டுள்ள கூடுதல் தலைமைச் செயலாளருக்கு கடிதம் எழுதியுள்ளார்.

கொரோனா பேரிடர் காரணமாக அறிவிக்கப்பட்டுள்ள ஊரடங்கு உத்தரவினால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு உதவும் நோக்கத்தோடு திமுக சார்பில் ‘ஒன்றிணைவோம் வா’ செயல் திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. இதன் தொடர்ச்சியாக மாவட்ட நிர்வாகிகளுடன் திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் தொடர்ந்து ஆலோசனை நடத்தி வருகிறார்.

இந்த நிலையில் நேற்று மும்பை வாழ் தமிழர்களுடன் மு.க.ஸ்டாலின் காணொலிக் காட்சி மூலம் கலந்துரையாடினார். அப்போது மும்பையில் உள்ள

மு.க.ஸ்டாலின்

தமிழ் அமைப்புகளின் நிர்வாகிகள், பிரமுகர்கள், வியாபார சங்க நிர்வாகிகள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினருடன் பேசினார்.

சிறப்பு அதிகாரி

பின்னர் அவர்களது கோரிக்கையை ஏற்று அவர்களை தமிழகம் அழைத்து வர ஏற்பாடு செய்யும்படி பிற மாநிலங்களில் சிக்கியுள்ள தமிழர்களை மீட்க சிறப்பு அதிகாரியாக நியமனம் செய்யப்பட்டுள்ள வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் அதுல்யா மிஸ்ராவுக்கு கடிதம் எழுதியுள்ளார்.

அந்த கடிதத்தில் கூறப்பட்டிருப்பதாவது:–

மகாராஷ்ட்ராவில் வாழும் தமிழகத்தைச் சேர்ந்த தொழிலாளர்களுடன் இன்று நான் நடத்திய காணொலிக் காட்சி ஆலோசனையில், அங்கு வாழும் நம் மாநிலத் தொழிலாளர்கள் அனைவரும், தமிழகம் திரும்ப விரும்புவதாகத் தெரிவித்தனர். ஆகவே, அவர்களுக்குத் தேவையான உதவிகளைச் செய்து, அவர்களை சிறப்பு ரெயில்கள் மூலம் தமிழகத்திற்கு அழைத்து வருவதற்கு உரிய ஏற்பாடுகளை உடனடியாக மேற்கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

கொரோனா நோய்த்தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் அடிப்படையில், மகாராஷ்டிராவில் இருந்து அவர்களை தமிழகம் அழைத்துவந்து, தமிழகத்தில் அவர்களுக்கு உரிய பரிசோதனைகள் செய்து, அரசு அறிவித்துள்ள வழிகாட்டுதல்களின்படி தனிமைப்படுத்தி, அவர்களது பாதுகாப்பை உறுதி செய்திட வேண்டும் என்றும் வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அந்த கடிதத்தில் கூறப்பட்டுள்ளது.

ஆட்டோ தொழிலாளர்களுக்கு

நல திட்ட உதவிகள்!

வேலூர் மே, 01–

வேலூர் மேற்கு மாவட்ட தகவல் தொழில் நுட்ப பிரிவின் சார்பில் மே தினத்தை முன்னிட்டு தொழிலாளர்களுக்கும் மற்றும் ஆட்டோஓட்டுநர்களுக்கு இலவசமாக 5 கிலோ அரிசிமற்றும்மளிகைபொருட்கள்என 150 குடும்பங்களுக்கு வேலூர் மேற்கு மாவட்ட கதவல் தொழில்நுட்ப பிரிவு செயலாளர் ஜனனீ சதிஷ் குமார் சார்பில் கழகப் பொருளாளர் மூர்த்தி வழங்கினார். இந்நிகழ்ச்சிக்கு அரசு வழக்கறிஞர் அண்ணா தொழிற்கங்க செயலாளர் அண்ணாமலை வேலூர் மேற்கு பகுதி கழக செயலாளர் நாகு (எ) நாகராஜன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். இந்நிகழ்ச்சியில் தகவல் தொழில்நுட் பிரிவி தலைவர் ராஜன் பொருளாளர் நித்தியானந்தம் கழகச் செயல்வீரர் சூரியா மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

முறைகேடு புகார் எதிரொலி:

தமிழக அரசின் ரூ.2,000 கோடி டெண்டருக்கு மத்திய அரசு தடை!

நடவடிக்கை பாயும் என எச்சரிக்கை!!

புதுடெல்லி, மே. 2–

தமிழ்நாடு பைபர் நெட் கார்ப்பரேஷன் சார்பில் விடுக்கப்பட்ட ரூ.2,000 கோடி மதிப்பிலான டெண்டருக்கு மத்திய அரசு தடை விதித்துள்ளது. அதுமட்டுமல்லாமல், தவறு செய்தவர்கள் மீது கடும் நடவடிக்கை பாயும் என எச்சரிக்கை விடுத்துள்ளது.

பாரத் நெட் திட்டத்திற்கு நான்கு ‘பேக்கேஜ்களாக’ ஆன்லைன் டெண்டர் 5.12.2019 அன்றே கோரப்பட்டு, அதைச் சமர்ப்பிக்கும் கடைசித் தேதி ஜனவரி 20 ஆம் தேதியுடன் முடிந்துவிட்டது. 22.1.2020 அன்று அந்த டெண்டர் திறக்கப்படுவதாகவும் அறிவிக்கப்பட்டு, அந்தத் தேதியும் முடிந்துவிட்டது.

20.1.2020ம் தேதி டெண்டருக்கு இறுதித் தேதி என்பதால், அது தொடர்பான முன் கூட்டம் நடைபெற்றதா அல்லது ரத்து செய்யப்பட்டதா? என்ற கேள்விக்கு தெளிவான பதில் இல்லை. இதற்கிடையே இந்த இறுதித் தேதிக்குப் பிறகு தகவல் தொழில் நுட்பச் செயலாளர்சந்தோஷ்பாபுஐ.ஏ.எஸ். விருப்ப ஓய்வில் சென்றதாகச் செய்தி கசிந்தது.

இந் நிலையில், 27.1.2020 அன்று அவரும், தமிழ்நாடு பைபர் நெட் கார்ப்பரேஷன் நிர்வாக இயக்குநராக இருந்த எம்.எஸ்.சண்முகமும் திடீரென்று ‘டம்மி’ பதவிகளுக்கு தூக்கியடிக்கப்பட்டதும் சர்ச்சையை கிளப்பின. ஏற்கனவே விடப்பட்ட டெண்டர் (டிஐபிஆர்/4685/டெண்டர்/2019) என்ன ஆயிற்று? அறிவிக்கப்பட்டபடி 22.1.2020 அன்று மேற்கண்ட அந்த நான்கு பேக்கேஜ்கள் அடங்கிய டெண்டர் திறக்கப்பட்டதா இல்லையா? என அடுக்கடுக்கான கேள்விகள் பாரத் நெட் உள்கட்டமைப்புப் பணிகளின் டெண்டரில் அணி வகுத்து நிற்கின்றன.

விஸ்வரூபம்

கோப்புகள்உண்மையை இப்போது மட்டுமல்ல, எப்போதும் பேசும் என்பதை யாரும் மறக்க முடியாது. பாரத் நெட் டெண்டரில் நடைபெற்றுள்ள திரைமறைவு ரகசியங்களை விசாரித்தால், இந்த டெண்டர் தகவல் தொழில்நுட்பத் துறையின் 9–வது ஊழல் அதிசயமாகவே இருக்கும் என்ற விமர்சனம் விஸ்வரூபம் எடுத்துள்ளது.

2,000 கோடி ரூபாய்க்கு மேலான பாரத் நெட் டெண்டர் முறைகேடுகளை துருவித்துருவி விசாரித்தால் மேலும் பல திடுக்கிடும் தகவல்கள் வெளிச்சத்திற்கு வரும்என்றுகூறப்படுகிறது.

இந்த விவகாரத்தை அறப்போர் இயக்கம் மத்திய அரசின் கவனத்திற்கு கொண்டு சென்றது. டெண்டரை நிறுத்தி வைக்குமாறு தமிழக அரசை மத்திய வர்த்தகம் மற்றும் தொழில் அமைச்சகத்தின் கீழ் உள்ள தொழில் மற்றும் உள்நாட்டு வர்த்தக மேம்பாட்டுத் துறை பணித்துள்ளது.

அதிரடி திருப்பம்

குறிப்பிட்ட 2 நிறுவனங்கள் மட்டுமே பயன்பெறும் வகையில் தமிழக அரசு டெண்டர் விதிமுறைகளை மாற்றியுள்ளது என்பதுதான் அறப்போர் இயக்கத்தின் பிரதான குற்றச்சாட்டு ஆகும். இதுதொடர்பாக ஏற்கனவே முதலமைச்சர், தலைமைச் செயலாளர் மற்றும் தொலைத்தொடர்புத் துறைக்கு கடிதம் எழுதியுள்ளதாக அறப்போர் இயக்கத்தின் அமைப்பாளர் ஜெயராம் வெங்கடேசன் கூறியுள்ளார். இதற்கிடையே தவறு செய்தவர்கள் யாரும் தப்ப முடியாது. அவர்கள் மீது கடும் நடவடிக்கை பாயும் என்று மத்திய அரசு எச்சரிக்கை விடுத்துள்ளது.

மத்திய அரசுக்கும், தமிழக அரசுக்கும் இடையிலான உறவு படிப்படியாக தொய்வு அடைந்து வருகிறது. எனவே எதிர்பாராத அதிரடி திருப்பம் திடீரென ஏற்பட வாய்ப்புள்ளது என்று டெல்லி அரசியல் வட்டாரத் தகவல் தெரிவிக்கிறது.

வைரஸ் தொற்று அதிகரிப்பு:

கோயம்பேட்டில் இருந்து அரியலூர் சென்ற 7 பேருக்கு கொரோனா பாதிப்பு!

சென்னை, மே. 02–

சென்னை கோயம்பேடு மார்க்கெட்டில் கொரோனா வைரஸ் பரவி வருகிறது. இந்த நிலையில் அங்கிருந்து அரியலூர் சென்ற 13 பேரில் 7 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

கோயம்பேடு மார்க்கெட்டில் கடந்த சில நாட்களாக கொரோனா தொற்று அதிகரித்து வருகிறது. கடந்த 28–ந் தேதி 2 காய்கறி வியாபாரிகள், பழ வியாபாரிகள், மார்க்கெட்டில் பணிபுரிந்த டிரைவர் ஆகியோருக்கு கொரோனா தொற்று பாதிப்பு காணப்பட்டது.

இதனையடுத்து மார்க்கெட்டில் பணிபுரிந்து கொரோனாவில் பாதிக்கப்பட்ட குடும்பத்தினருக்கும் வைரஸ் பரவியது. டிரைவரின் 11 வயது மகனுக்கும் நோய் தொற்று ஏற்பட்டது. பூ மார்க்கெட்டில் பணிபுரிந்த தொழிலாளி ஒருவர் பாதிக்கப்பட்டார்.

இந்த நிலையில் கோயம்பேடு மார்க்கெட்டில் நேற்று முன்தினம் ஒரே நாளில் வியாபாரிகள், தொழிலாளர்கள் என 30 பேருக்கு கொரோனா வைரஸ் பரவியுள்ளது. இது பெரிய அதிர்ச்சியை ஏற்படுத்தியது. வைரஸ் பரவலை கட்டுப்படுத்த சென்னை மாநகராட்சி அதிகாரிகள் மற்றும் சுகாதாரத் துறை அதிகாரிகள் தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டு வருகின்றனர்.

அரியலூர் சென்ற 7 பேர்

இந்த நிலையில் கோயம்பேட்டில் இருந்து 13 பேர் சொந்த ஊரான அரியலூருக்கு புறப்பட்டு சென்றனர். அப்போது அவர்களை பரிசோதித்ததில் 7 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. சரக்கு வாகனங்களில் சென்ற அவர்களை தனிமைப்படுத்தி தீவிர கண்காணிப்பில் வைத்துள்ளனர். இந்த சம்பவம் அந்த பகுதியில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

வாணியம்பாடிகச்சேரிசாலையில்தடைஉத்தரவைமீறிசெயல்பட்டதொழிற்சாலையை ஆணையர் சிசல் தாமஸ் சீல் வைத்த காட்சி. அருகில் சம்பத் மற்றும் அரி ஆகியோர் உள்ளனர்.

திருவண்ணாமலையில் அரசு பணிமனை முன்பு தொ.மு.ச.வினர் 8 மணி நேர வேலையை 10 மணி நேரமாக உயர்த்தியதை கண்டித்து கருப்பு பேட்ஜ் அணிந்து எதிர்ப்பு தெரிவித்த காட்சி.

ஊரடங்கை நீட்டிப்பதால்

குடும்பத்திற்கு ரூ.2,000 வழங்க வேண்டும்!

டி.டி.வி.தினகரன் கோரிக்கை!!

சென்னை, மே. 2–

கொரோனா தடுப்பு நடவடிக்கையாக ஊரடங்கு நீட்டிக்கப்பட்டு இருப்பதால் ஒவ்வொரு குடும்பத்திற்கும் மேலும் ரூ.2,000 வழங்க வேண்டும் என தமிழக அரசுக்கு டி.டி.வி.தினகரன் கோரிக்கை விடுத்துள்ளார்.

இதுகுறித்து அ.ம.மு.க. பொதுச் செயலாளர் டி.டி.வி.தினகரன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:–

ஊரடங்கு மே 3 ஆம் தேதியுடன் முடிவடைய உள்ள நிலையில் ‘அதனை முழுமையாக முடிவுக்கு கொண்டுவருவது நல்லதல்ல; படிப்படியாகவே தளர்த்த வேண்டும்’ என்று மருத்துவ வல்லுனர் குழு அரசுக்கு அறிக்கை அளித்திருக்கிறது. சென்னையில் நாள்தோறும் பாதிக்கப்படும் நபர்களின் எண்ணிக்கை மிக வேகமாக அதிகரிப்பதைப் பார்த்தால் அது சரி என்றே படுகிறது. அப்படி ஊரடங்கை நீட்டிக்கும் முடிவை அரசு எடுக்கும் போது, மக்களுக்கு குழப்பம் ஏற்படாதபடி முன்கூட்டியே தெளிவான நடைமுறைகளோடு அறிவித்திட வேண்டும்.

உறுதி செய்ய வேண்டும்

மேலும், ஏழை எளிய அடித்தட்டு மக்களை தொடர் ஊரடங்கு மொத்தமாக

டி.டி.வி.தினகரன்

புரட்டிப்போட்டிருக்கிறது. அவர்களுக்கு மூன்று வேளை உணவு கிடைப்பது பெரும் சவாலாகவே இருக்கிறது. எனவே ஊரடங்கு நீட்டிக்கப்படும் பட்சத்தில், ஏழை எளிய, நடுத்தர மக்கள் உள்ளிட்ட தமிழக மக்கள் அனைவருக்கும் மூன்று வேளை உணவு கிடைப்பதை அரசு உறுதி செய்ய வேண்டும்.

ரேஷன் கார்டுதாரர்கள் மற்றும் அமைப்புசாரா தொழிலாளர்களுக்கு முதற்கட்டமாகஅறிவிக்கப்பட்ட ரூ.1000, அமைப்புசாரா தொழிலாளர்களுக்குஇரண்டாம்கட்டமாக அறிவிக்கப்பட்ட ரூ.1000 ஆகியவை முழுமையாக சென்றடைவதை தமிழக அரசு துரிதப்படுத்தவேண்டும். தற்போது ஊரடங்கை நீட்டித்தால் கூடுதல் உதவியாக குறைந்த பட்சம் மேலும்ரூ.2000 ஒவ்வொரு குடும்பத்திற்கும் உடனடியாக வழங்கப்படவேண்டும். இதற்காக மத்திய அரசிடம் இருந்து தமிழக அரசு கூடுதல் நிதியைக் கேட்டுப் பெறவேண்டும். பிரதமருக்கு கடிதம் எழுதியதோடு கடமை முடிந்தது என முதலமைச்சர் பழனிசாமி விட்டுவிடக்கூடாது.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

தமிழ்நாட்டில் அமல்படுத்த...

1–ம் பக்கத் தொடர்ச்சி

மற்ற காரணங்களுக்காக வெளியேவரக்கூடாது. இது தவிர, மதுக்கடை விற்பனை, பஸ் போக்குவரத்து, கால் டாக்சி சேவை, போன்றவற்றிற்கும் மத்திய அரசு நேற்று புதிய சலுகைகளை அறிவித்தது. அதே சமயம் சிவப்பு, பச்சை, ஆரஞ்சு மண்டலங்களை நிர்ணயிக்கும் அதிகாரத்தை மத்திய அரசு மட்டுமே செயல்படுத்த முடியும் என்றும்அறிவிக்கப்பட்டுள்ளது.

ஒரு பகுதியை சிவப்பு மண்டலமாக மாற்றும் அதிகாரம்மாநிலஅரசுக்குவழங்கப்பட்டுள்ளது. ஆனால் சிவப்பு மண்டலத்தில் இருந்து மற்ற பகுதிகளுக்கு மாற்றுவதை மத்திய அரசு தான் முடிவு செய்யும் என்று கூறியுள்ளனர்.

மேற்கண்ட அறிவிப்புகளை உள்துறை அமைச்சகம் நேற்று வெளியிட்டது. ஆனால் தமிழகத்தில் ஏற்கனவே கடந்த மாதம் 15–ந் தேதி வெளியிட்ட கட்டுப்பாடுகள்தளர்வுகூட பெரும்பாலும் அமல்படுத்தவில்லை. எனவே நேற்று மத்திய அரசு அறிவித்த தளர்வுகளை அமல்படுத்துவது குறித்து இன்று காலை 11 மணிக்கு முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி அமைச்சரவை கூட்டத்தில் ஆலோசனை நடத்தினார். தமிழ்நாட்டின் பொருளாதாரநடவடிக்கைகளைமீண்டும் முன்னெடுத்து செல்லவும், கட்டுப்பாடுகளை தளர்த்தவும், ஆலோசனை கூற அமைக்கப்பட்ட சிறப்புக்குழு தனது இடைக்கால அறிக்கையை அரசிடம் நேற்று தாக்கல் செய்தது.

அதனடிப்படையில் இன்று அமைச்சரவையில் விவாதிக்கப்பட்டது. தமிழ்நாட்டை பொறுத்தவரையில் சிவப்பு மண்டலப்பகுதிகளில்இப்போதுஇருக்கும் ஊரடங்குகட்டுப்பாடுகளை நீடிக்க அரசு ஆலோசித்து வருவதாக கூறப்படுகிறது. மற்றபகுதிகளில்மத்தியஅரசின்புதியவிதிமுறைகளுக்கு ஏற்ப மாற்றங்கள் ஏற்பட வாய்ப்புள்ளது.

கடலூரில் நாளை முழு ஊரடங்கு!

கடலூர், மே. 02–

கடலூர் மாவட்டத்தில் நாளை முழு ஊரடங்குக்கு மாவட்ட ஆட்சியர் உத்தரவிட்டுள்ளார். கடலூர் மாவட்டத்தில்கொரோனாவைரஸ்பரவலைதடுப்பதற்காக அந்த மாவட்ட ஆட்சியர் தீவிர நடவடிக்கைகளை எடுத்து வருகிறார். இதனால்நாளை3–ந்தேதிகடலூர்மாவட்டத்தில் முழு ஊரடங்கிற்கு உத்தரவிடப்பட்டுள்ளது. இந்த முழு ஊரடங்கை பொதுமக்கள்அனைவரும்கட்டுக்கோப்புடன் கடைபிடிக்க வேண்டுமென்று வலியுறுத்தப்பட்டுள்ளது.

வணிக நிறுவனங்கள் அனைவரும் ஒத்துழைக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. அதே நேரத்தில் முழு ஊரடங்கின் போது பால், மருந்து பொருட்கள் உள்ளிட்டவைகள் தவிர மற்ற நிறுவனங்கள் இயங்குவதற்கு அனுமதி இல்லை என்று கடலூர் மாவட்ட ஆட்சியர் அறிவித்துள்ளார்.

கோவை, ஈரோட்டில்

40 ரெயில் பெட்டிகள் கொரோனா வார்டுகளாக மாற்றம்!

கோவை, மே. 2–

கோவை ரயில் நிலையத்தில் கொரோனா வார்டுகளாக மாற்றப்பட்ட 40 ரயில் பெட்டிகள், 20 பெட்டிகள் கொண்ட 2 ரயில்களாகப் பிரிக்கப்பட்டு, கோவை, ஈரோடு நிலையங்களில் தயார் நிலையில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

கொரோனா நோய்த் தொற்று பரவாமல் தடுக்க நாடு முழுவதும் மார்ச் 24–ஆம் தேதி முதல் ஊரடங்கு உத்தரவு அமல்படுத்தப்பட்டது. இதனால் நாட்டின் அனைத்து மாநிலங்களிலும் சேர்த்து, 3,700 ரயில்கள் இயக்கப்படாமல் நிறுத்தப்பட்டுள்ளன.

இந் நிலையில், கொரோனா நோய்த்தொற்றுக்கு சிகிச்சை மேற்கொள்ள உதவும் வகையில், சேலம் கோட்டத்தில், கோவைரயில்நிலையத்தில் உள்ள பணி மனையில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த 32 ரயில் பெட்டிகள் மற்றும் ஈரோடு பணிமனையில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த 8 பெட்டிகள் என மொத்தம் 40 பெட்டிகள் கொரோனா வார்டுகளாக மாற்றப்பட்டன.

இதில், நோயாளிகளுக்கு தனி வார்டுகள், மருத்துவர்கள், செவிலியர், மருத்துவ உதவியாளர்களுக்கு தனியாக வார்டுகள் அமைக்கப்பட்டுள்ளன. 40 பெட்டிகளில், 384 படுக்கை வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. ஏப்ரல் 7ஆம் தேதி பணிகள் நிறைவுற்று கொரோனா வார்டுகளாக மாற்றப்பட்டுள்ள இந்த ரயில் பெட்டிகள் இதுவரை பயன்பாட்டுக்கு அனுப்பப்படவில்லை.

இது தொடர்பாக, கோவை ரயில் நிலைய இயக்குநர் சதீஷ் சரவணன் கூறியதாவது:– 40 ரயில் பெட்டிகள் கொரோனா வார்டுகளாக மாற்றப்பட்டு, அவை 20 பெட்டிகள் கொண்ட 2 ரயில்களாக இணைக்கப்பட்டுள்ளன. அதில் ஒரு ரயில் கோவையிலும், மற்றொரு ரயில் ஈரோடு ரயில் நிலையத்திலும் நிறுத்திவைக்கப்பட்டுள்ளன. தேவைப்படும் இடத்திற்கு இந்த ரயில் பெட்டிகள் உடனடியாக அனுப்பி வைக்கத் தயார் நிலையில் உள்ளன என்றார்.

தினமும் மாலைமுரசு படியுங்கள்

சிவப்பு, ஆரஞ்சு, பச்சை மண்டலங்களில் அனுமதிக்கப்படும் தொழில்கள்

மத்திய அரசு அறிவிப்பு முழு விவரம்

சென்னை, மே. 02-

சிவப்பு, ஆரஞ்சு, பச்சை மண்டலங்களில் ஊரடங்கு கட்டுப்பாடுகளை தளர்த்துவது குறித்து மத்திய அரசு அறிவித்துள்ளது. தமிழகத்தில் 22 மாவட்டங்கள் சிவப்பு மண்டலத்திலும், 9 மாவட்டங்கள் ஆரஞ்சு மண்டலத்திலும், 6 மாவட்டங்கள் பச்சை மண்டலத்திலும் இருப்பதாக மத்திய அரசு நேற்று வெளியிட்ட அறிவிப்பில் கூறியுள்ளது.

நாடு முழுவதும் சிவப்பு, ஆரஞ்சு, பச்சை மண்டலங்களில் எந்தெந்த தொழில் அனுமதிக்கப்படலாம் என்பதை உள்துறை அமைச்சகம் வெளியிட்டுள்ளது. ஒவ்வொரு மண்டலத்திலும் அனுமதிக்கப்படும் தொழில்கள் மற்றும் தடை செய்யப்பட்ட தொழில்கள் விவரம் வருமாறு:-

சிவப்பு மண்டலம்

சிவப்பு மண்டலத்தில் மே 4-ந் தேதி முதல் சீல் வைக்கப்பட்ட இடங்கள் தவிர்த்து மற்ற இடங்களில் தளர்த்தப்படும் கட்டுப்பாடுகள் வருமாறு:-

1. அனுமதிக்கப்பட்ட காரணங்களுக்காக தனி நபர்கள், வாகனங்களின் நடமாட்டத்துக்கு அனுமதி (கார்கள் ஓட்டுநர் தவிர்த்து அதிகபட்சம் இருவருக்கு அனுமதி, மோட்டார் சைக்கிளில் பின்னால் யாரும் அமர அனுமதியில்லை).

2. நகர்ப்புறங்களில் உள்ள சிறப்பு பொருளாதார மண்டலங்கள், ஏற்றுமதி சார்ந்த தொழிற்சாலைகள், தொழிற்பேட்டைகளில் உள்ள தொழிற்சாலைகள் இயங்க அனுமதி.

3. மருந்துகள், மருந்து மூலப் பொருள்கள், மருத்துவ உபகரணங்கள் உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்கள் உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகள் இயங்க அனுமதி. சமூக இடைவெளியை பின்பற்றி அவை செயல்பட வேண்டும்.

4. நகர்ப்புறங்களில் கட்டுமானப் பணிக்கு நிபந்தனையுடன் அனுமதி. வெளியிடங்களிலிருந்து தொழிலாளர்களை வரவழைக்காமல், பணியிடத்திலேயே உள்ள தொழிலாளர்களைக் கொண்டு நடைபெறும் பணிகள் மட்டுமே அனுமதிக்கப்படும்.

5. ஊரகப் பகுதிகளில், வணிக வளாகங்கள் அல்லாத அனைத்துக் கடைகளும் செயல்படலாம்.

6. ஊரகப் பகுதிகளில் அனைத்து கட்டுமானப் பணிகள், தொழிற்சாலைகளுக்கு அனுமதி, செங்கல்சூளைகள், உணவு பதப்படுத்தும் ஆலைகள் செயல்படலாம்.

7. நகர்ப்புறங்களில் தனிக் கடைகள், குடியிருப்பு வளாகங்களில் உள்ள கடைகள் செயல்படலாம்.

8. அனைத்து விதமான வேளாண் நடவடிக்கைகள், கால்நடை பராமரிப்பு, தோட்டக்கலை செயல்பாடுகள்.

9. அனைத்து விதமான மருத்துவ சேவைகள் தொடர்ந்து செயல்படும்.

10. வங்கிகள், வங்கிசாராத நிதிநிறுவனங்கள், காப்பீடு, கடன் வழங்கும் கூட்டுறவு சங்கங்கள் தொடர்ந்து செயல்படும்.

11. குழந்தைகள், முதியோர், ஆதரவற்றோர் காப்பகங்கள், அங்கன்வாடிமையங்கள் செயல்படும்.

12. அத்தியாவசியப் பொருள்களுக்கான இணைய வழி வர்த்தகத்துக்கு அனுமதி.

13. 33 சதவீத ஊழியர்களுடன் அரசு, தனியார் நிறுவனங்கள் செயல்படலாம்.

14. அச்சு, மின்னணு ஊடகங்கள் தொடர்ந்து செயல்படலாம். கால் சென்டர்கள், தகவல் தொழில்நுட்பம் சார்ந்த சேவைகள், தனியார் பாதுகாப்பு நிறுவனங்கள் இயங்க அனுமதி.

15. கட்டுப்படுத்தப்பட்ட பகுதிகள் தவிர்த்து பிற இடங்களில் உள்ள மருத்துவமனைகளில் புற நோயாளிகள் பிரிவு இயங்க அனுமதிக்கப்படும்.

செயல்படத்தடை

1. சைக்கிள், ரிக் ஷா, ஆட்டோக்கள்

2. டாக்ஸி, செயலி அடிப்படையிலான கார்கள்

3. மாவட்டத்துக்கு உள்ளேயும், பிற மாவட்டங்களுக்கும் பேருந்துகளை இயக்க தடை

4. முடித்திருத்தகங்கள், அழகு நிலையங்கள்

5. வணிக வளாகங்கள், சந்தைகளில் உள்ள கடைகள்.

ஆரஞ்சு மண்டலம்

ஆரஞ்சு மண்டலத்தில் மே 4-ந் தேதி முதல் தளர்த்தப்படும் கட்டுப்பாடுகள் வருமாறு:-

1. ஒரே ஒரு பயணியுடன் டாக்ஸி செயலி அடிப்படையிலான கார்கள் இயங்கலாம்.

2. மாவட்டம் விட்டு மாவட்டம் செல்ல தனிநபர்கள், வாகனங்களுக்கு அனுமதி (அனுமதிக்கப்பட்ட நடவடிக்கைகளுக்கு மட்டுமே. கார்களில் ஓட்டுநர் தவிர அதிகபட்சம் இருவர் செல்லலாம். மோட்டார் சைக்கிளில் இருவர் செல்லலாம்). இவை தவிர சிவப்பு மண்டலத்தில் அனுமதிக்கப்பட்ட அனைத்து நடவடிக்கைகளும் அடங்கும்.

செயல்படத் தடை: மாவட்டத்துக்குள்ளேயும், பிற மாவட்டங்களுக்கும் பேருந்துகளை இயக்க அனுமதியில்லை.

பச்சை மண்டலம்

பச்சை மண்டலத்தில் மே 4-ந் தேதி முதல் தளர்த்தப்படும் கட்டுப்பாடுகள் வருமாறு:-

1. 5. சதவீத இருக்கை வசதியுடன் பேருந்துகள் இயங்கலாம்.

2. 50 சதவீத பேருந்துகளுடன் பேருந்து பணிமனைகள் செயல்பட அனுமதி.

இவை தவிர சிவப்பு, ஆரஞ்சு மண்டலத்தில் அனுமதிக்கப்பட்ட அனைத்து நடவடிக்கைகளும் அடங்கும்.

வேலூர் மேற்கு மாவட்ட அ.தி.மு.க. தகவல் தொழில்நுட்ப செயலாளர் ஜனனி சதீஷ்குமார் தலைமையில், பொருளாளர் மூர்த்தி மே தினத்தை முன்னிட்டு ஆட்டோ தொழிலாளர்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கிய காட்சி. அருகில் நாகு, ராஜன், நித்தியானந்தம் ஆகியோர் உள்ளனர்.

தமிழ்நாட்டின் உரிமைகளை

பாதுகாப்பதில் உறுதியாக இருப்போம்!

துரைமுருகனுக்கு ஜெயக்குமார் பதில்!!

சென்னை, மே. 2–

தமிழ்நாட்டின் உரிமைகளை பாதுகாப்பதில் உறுதியாக இருப்பதாக அமைச்சர் ஜெயக்குமார் விளக்கம் அளித்துள்ளார்.

காவேரி நதிநீர் மேலாண்மை ஆணையம் குறித்து துரைமுருகன் அறிக்கைக்கு அமைச்சர் டி.ஜெயக்குமார் அளித்துள்ள விளக்கம் வருமாறு:–

காவேரி நதி நீர் பிரச்சனைகளில், அம்மா அரசின் சாதனைகளையும் தி.மு.க வின் துரோகங்களையும் தமிழ்நாடு மக்கள் நன்கு அறிவார்கள். காவேரி மேலாண்மை வாரியம், அம்மாவின் அரசு எடுத்த உறுதியான சட்ட போராட்டங்களினால்தான் அமையப்பெற்றது என்பதை நாடே அறியும்.



மத்திய அரசு 24.4.2020 அன்று வெளியிட்ட அரசிதழில் காவேரி நீர் மேலாண்மை வாரியத்தை ஜல்சக்தி அமைச்சகத்தின் பொறுமைகளில் மத்திய அரசு அலுவலக விதிகளின் படி சேர்த்து அறிவிக்கை செய்துள்ளது. இது வழக்கமான நிர்வாக நடைமுறைக்கான நடவடிக்கை என்பதை சம்மந்தப்பட்ட மத்திய நீர்வளத் துறை ஆதார உயர் அலுவலர்கள் மற்றும் சட்ட வல்லுநர்கள் தெரிவித்த விவரங்களின் அடிப்படையில் ஒரு விளக்க அறிக்கையை 29.4.2020 அன்று தமிழ்நாடு அரசு வெளியிட்டது.

இருப்பினும் எதிர்கட்சித் துணைத் தலைவர் துரைமுருகன் தனக்கு எல்லாம் தெரியும் என்ற தோரணையில், உண்மை நிலை அறிந்தும் அரசியல் ஆதாயத்திற்காக மக்களை திசை திருப்ப ஒரு அறிக்கையை வெளியிட்டுள்ளது விந்தையாக இருக்கிறது. மத்திய அரசில் திமுக கட்சி அங்கம் வகித்தும், காவேரி பிரச்சனையில் தமிழ்நாட்டின் நீர் பங்கினை பெறத்தவறியதை, அம்மாவின் அரசு தன் கடும் முயற்சிகளால் பெற்று தந்த வரலாற்று சிறப்புமிக்க சாதனையை நாடே அறியும்.

மத்திய ஜல் சக்தி துறை செயலாளர் யூ.பி.சிங் இது வழக்கமான அலுவலக நடைமுறையே என்றும் இதனால் காவேரி மேலாண்மை ஆணையத்தின் தன்னாட்சி எந்தவிதத்திலும் பாதிக்கப்படாது என்பதை தெளிவுபட குறிப்பிட்டுயிருந்ததை துரைமுருகன் புரியாதது போல கபட நாடகம் ஆடுகிறரா?

கிருஷ்ணா வாரியம்

1.6.2018ல் காவேரி மேலாண்மை ஆணையத்தை அரசிதழில் வெளியிட்டதும் அந்த ஆணையத்தினுடைய அதிகாரங்கள் மற்றும் பணிகளை உச்ச நீதிமன்ற ஆணையின்படி வரையறுத்ததும் அப்போதைய மத்திய நீர்வள ஆதாரம், நதி மேம்பாடு மற்றும் கங்கை புனரமைப்பு அமைச்சகமே ஆகும்.

மத்திய அரசின் கீழ் இயங்கும் அமைச்சகங்கள் கையாளக்கூடிய பொருண்மைகள் குறித்துவிதிகளில்திருத்தங்கள் மேற்கொள்ளுவதற்கு ஏதுவாக இந்த அறிக்கையை மத்திய அரசு வெளியிட்டுள்ளது. இந்த அறிவிக்கையில் சேர்க்கப்பட்டுள்ள காவேரி நதி நீர் மேலாண்மை ஆணையத்தின் தலைவர், உறுப்பினர்கள், உறுப்பினர் செயலர் மற்றும் காவேரி நீர் முறைப்படுத்தும் குழு தலைவர், உறுப்பினர் போன்றவர்களை நியமித்தல் அவர்களின் சம்பளம் நிர்ணயம் செய்தல் போன்ற பணிகள் மட்டுமே ஜல் சக்தி அமைச்சகத்தால் மேற்கொள்ளப்படும்.

எனவே காவேரி மேலாண்மை ஆணையத்தின் தன்னாட்சிப் பணிகளில் ஜல் சக்தி அமைச்சகம் தலையிடுவதற்கு வாய்ப்பில்லை.

காவிரி நடுவர் மன்றம்

காவேரி நதி நீரை நம்பியிருக்கும் விவசாயிகளின் நலனுக்காக அரசு எடுத்துவரும் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை தாங்கிக் கொள்ள முடியாத தி.மு.க. கட்சித் தலைவர் மு.க.ஸ்டாலின் மற்றும் முன்னாள் அமைச்சர் துரைமுருகன் தேவையற்ற குழப்பத்தை ஏற்படுத்தி தங்களது சுயநலனுக்காக அரசியல் ஆதாயத்தை தேட முயற்சிப்பது வன்மையாக கண்டிக்கத்தக்கது.

முதலமைச்சர் தலைமையிலான அரசு விவசாயிகளின் நலன்களையும் தமிழ்நாட்டின் உரிமைகளையும் தொடர்ந்து பாதுகாத்து வருவதில் எப்பொழுதும் உறுதியாக இருந்து வருவதை தமிழ்நாட்டு மக்கள் அறிவார்கள். இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

மாலை முரசு முரசம் 02-05-2020

அடுத்த காட்சி ஆரம்பம்!

நாடு முழுவதும் ஊரடங்கு உத்தரவு மேலும் 2 வாரங்களுக்கு நீட்டிக்கப்பட்டுள்ளது. இதன்படி வருகிற 17–ந் தேதி வரை ஊரடங்கு நீட்டிக்கப்படுகிறது. இந்த 14 நாட்களில் கடைபிடிக்க வேண்டிய விதிமுறைகளை மத்திய அரசு பிறப்பித்திருக்கிறது. ஊரடங்கு உத்தரவை கடைபிடிப்பதற்காக கொரோனா வைரஸ் பாதிப்பு அதிகம் உள்ள மாவட்டங்கள் சிவப்பு மண்டலம், பாதிப்பு குறைவாக உள்ள மாவட்டங்கள் ஆரஞ்சு மண்டலம், பாதிப்பு இல்லாத மாவட்டங்கள் பச்சை மண்டலம் என்று மத்திய அரசு வகைப்படுத்தியுள்ளது. இந்த ஊரடங்கு நீட்டிப்பு காலத்தில் ரெயில், மெட்ரோ ரெயில், விமான சேவை இயக்கப்படாது என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. மாநிலங்களுக்கு இடையேயான பயணிகள் பேருந்து சேவையும் இயக்கப்படாது என்றும் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

ஆனால் அதேசமயம் மாநிலம் விட்டு மாநிலம் செல்லும் சரக்கு வாகனங்களுக்கு அனைத்து மாநில அரசுகளும் அனுமதி வழங்க வேண்டும் என்று மத்திய உள்துறை அமைச்சகம் தெரிவித்திருக்கிறது. அனைத்து மத்திய அரசு அலுவலகங்களும் 30 சதவீத ஊழியர்களுடன் செயல்படும் என்றும், இதேபோல தனியார் அலுவலகங்களும் 33 சதவீத ஊழியர்களுடன் செயல்படலாம் என்றும் கட்டுப்பாடுகளை விதித்துள்ளது. பச்சை குறியீடு மாவட்டங்களில் மதுபான விற்பனைக்கு அனுமதி வழங்கப்பட்டிருப்பது குடிமகன்களுக்கு குஷியோ குஷி. மற்ற இரு குறியீட்டு மாவட்டங்களில் மது விற்பனைக்கு அனுமதி வழங்கப்படாததால், அந்த மாவட்டங்களில் உள்ள குடிமகன்கள் இப்போதே அல்லாட ஆரம்பித்துவிட்டனர்.

இந்திய அளவில் கொரோனா வைரஸ் பாதிப்பு அதிகம் உள்ள 130 மாவட்டங்கள் சிவப்பு மண்டலங்களாக அறிவிக்கப்பட்டுள்ளன. இதில் சென்னை, மும்பை, டெல்லி, கொல்கத்தா, ஐதராபாத், புனே, பெங்களூர், அகமதாபாத் ஆகிய முக்கிய நகரங்கள் அடங்கும். இதேபோன்று 284 மாவட்டங்கள் கொரோனா வைரஸ் பாதிப்பு குறைவாக உள்ள ஆரஞ்சு மண்டலங்களாக அறிவிக்கப்பட்டுள்ளன. வைரஸ் பாதிப்பு இல்லாத 319 மாவட்டங்கள் பச்சை மண்டலங்களாக அடையாளம் காணப்பட்டுள்ளன. டெல்லி, மேற்கு வங்கம், தமிழகம், மகாராஷ்டிரம், உத்தரப்பிரதேசம் ஆகிய மாநிலங்கள் 10 அல்லது அதற்கு மேற்பட்ட சிவப்பு மண்டல மாவட்டங்களைக் கொண்டுள்ளன. ஆகவே அதிக பாதிப்புள்ள இடங்களில் தீவிர நடவடிக்கை அவசியம் என்று மத்திய அரசு அறிவித்துள்ளது.

கொரோனா வைரஸ் தொற்று ஏற்படாமல் இருக்க வேண்டுமானால் சமூக இடைவெளி என்பது மிக மிக அவசியம். தேவையின்றி வெளியில் வருவதோ அல்லது வாகனங்களில் சுற்றித் திரிவதோ கூடாது. முகக் கவசம் இல்லாமலும் இருக்கக் கூடாது. அடிக்கடி கைகளை சோப்பு போட்டு கழுவ வேண்டும். இதெல்லாம் அரசுகள் நமக்கு சொல்லியிருக்கிற அறிவுரைகள். இவை நம் உயிர் பாதுகாப்புக்காக சொல்லப்பட்டவை. இதில் அலட்சியம் காட்டுவது என்பது விபரீதத்தை ஏற்படுத்திவிடும். நோய் எதிர்ப்பு சக்தி உடலில் அதிகம் இருப்பின் கொரோனா நம்மை தொற்றாது. துரித உணவுகளை ஓரங்கட்ட வேண்டும். ஊட்டச்சத்துள்ள உணவுகளை நாம் உட்கொண்டால் நோய் எதிர்ப்பு சக்தி கிடைக்கும். நடைபயிற்சி அவசியம். அது ரத்தக்குழாய்களை பலப்படுத்தும். இதையெல்லாம் நாம் ஒரு கடமையாக நினைத்து கடைபிடித்தால் கொரோனா புறமுதுகிட்டு ஓடும்.

முன்பு உலக நாடுகளை பெரும் அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கிய இன்புலூன்சா வைரஸ் தொற்றை காட்டிலும் தற்போதைய கொரோனா வைரஸ் தொற்று மனிதர்களிடையே வேகமாக பரவும் ஆற்றலைக் கொண்டது. நோய் எதிர்ப்பு சக்தி மிகுந்த மனிதர்களையும் கூட இந்த வைரஸ் தாக்குகிறது. கொரோனா வைரசுக்கான தடுப்பு மருந்துகளை கண்டுபிடிக்கும் பணிகளில் உலகமே ஈடுபட்டிருக்கிறது. இந்த வைரசை முற்றிலும் ஒழிப்பதற்கு குறைந்தபட்சம் இன்னும் 2 ஆண்டுகள் ஆகும். உலக மக்கள் தொகையில் மூன்றில் ஒரு பங்கினருக்கு எதிர்ப்பு சக்தி கிடைக்கும் வரை இந்த வைரசை கட்டுப்படுத்த முடியாது என்று கொரோனா வைரஸ் தொடர்பாக அமெரிக்காவைச் சேர்ந்த நோய்த்தொற்று ஆராய்ச்சி மையத்தின் இயக்குநர் மைக்கேல் ஒஸ்டர் ஹோம் தலைமையிலான மருத்துவ நிபுணர்கள் அறிவித்துள்ளனர்.

இவர்கள் சொல்வதைப் பார்த்தால் அடுத்த 2 வருடத்திற்கு லாக்டவுன் செய்ய வேண்டியிருக்கும். அது இயலாத காரியம். ஏறக்குறைய 40 நாட்கள் ஊரடங்கு நடைமுறைப் படுத்தப்பட்டதில், நாடு முழுவதும் இயல்பு நிலை வெகுவாக பாதிக்கப்பட்டது. அன்றாடம் வேலைக்கு செல்லும் சாதாரண, சாமானிய மக்கள் வீட்டிற்குள் முடங்க வேண்டிய கட்டாயத்திற்கு ஆளானார்கள். ஒரு வேளை, இரு வேளை உணவு கூட இல்லாமல் அவதியுற்று வருகின்றனர். இந்நிலையில், மேலும் 2 வாரங்கள் ஊரடங்கு நீட்டிக்கப்பட்டிருப்பது அசாதாரண சூழ்நிலையைதான் ஏற்படுத்தும். நாடகத்தில் ஒரு காட்சி முடிந்ததும், அடுத்த காட்சி என்ன வரும் என்று எதிர்பார்ப்பதைப்போல, இந்த கொரோனாவின் கோரத்தாண்டவத்தால் நாட்டில் அடுத்து என்ன நடக்கும் என்பது புரியாத புதிராகவே இருக்கும். மொத்தத்தில் கொரோனா தடுப்புக்கான அடுத்த காட்சி ஆரம்பமாகி விட்டது.

மாலை முரசு செய்திகள்

மாலை முரசு தொலைக்காட்சி

நாளைய நிகழ்ச்சிகள் (03-05-2020)

ஞாயிற்றுக்கிழமை

காலை	நிகழ்ச்சிகள்
6.00	செய்திகள்
6.30	செய்திகள்
7.00	செய்திகள் (நேரலை)
7.30	செய்திகள்
8.00	செய்திகள் (நேரலை)
8.30	செய்திகள்
9.00	செய்திகள் (நேரலை)
9.30	செய்திகள்
10.00	செய்திகள் (நேரலை)
10.30	செய்திகள்
11.00	செய்திகள் (நேரலை)
11.30	செய்திகள்
12.00	செய்திகள் (நேரலை)
பிற்பகல்	நிகழ்ச்சிகள்
12.30	மாவட்ட முரசு (நேரலை)
1.00	செய்திகள் (நேரலை)
1.30	செய்திகள்
2.00	செய்திகள் (நேரலை)
2.30	செய்திகள்
3.00	செய்திகள் (நேரலை)
3.30	செய்திகள்
மாலை	நிகழ்ச்சிகள்
4.00	செய்திகள் (நேரலை)
4.30	செய்திகள்
5.00	செய்திகள் (நேரலை)
5.30	செய்திகள்
6.00	செய்திகள் (நேரலை)
6.30	செய்திகள்
இரவு	நிகழ்ச்சிகள்
7.00	செய்திகள் (நேரலை)
7.30	செய்திகள்
8.00	செய்திகள் (நேரலை)
8.30	செய்திகள்
9.00	செய்திகள் (நேரலை)
9.30	செய்திகள்
10.00	செய்திகள் (நேரலை)
10.30	செய்திகள்
11.00	செய்திகள் (நேரலை)
11.30	செய்திகள்
12.00	செய்திகள் (நேரலை)

TATA Sky 1564

VIDEOCON d2h 556 Digital DTH Service

TCCL 60

மற்றும் அரசு கேபிள்களிலும் ஒளிபரப்பாகிறது



வேலூர் நாராயணி பீடம் சார்பாக திருநங்கைகளுக்கு நிவாரண பொருட்களை சக்தி அம்மா வழங்கிய காட்சி

திருவாரூரில் நாளை முழு ஊரடங்கு!

மாவட்ட ஆட்சியர் அறிவிப்பு!!

திருவாரூர், மே. 02–

திருவாரூரில் நாளை முழு ஊரடங்கை அறிவித்து மாவட்ட ஆட்சியர் உத்தரவிட்டுள்ளார். கொரோனா தடுப்பு பணிகளுக்காக பல்வேறு நடவடிக்கைகளை அரசு எடுத்து வருகிறது. அதே போல் அந்தந்த மாவட்ட நிர்வாகமும், பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளன. இந்த நிலையில் நாளை 3–ந் தேதி திருவாரூர் மாவட்டத்தில் முழு ஊரடங்கு அமல்படுத்த மாவட்ட ஆட்சியர் உத்தரவிட்டுள்ளார்.

பால், மருந்தகங்கள் உள்ளிட்ட அத்தியாவசிய சேவைகள் தவிர மற்ற அனைத்துக்கடைகளையும், வணிக நிறுவனங்களையும் மூட மாவட்ட ஆட்சியர் உத்தரவிட்டுள்ளார்.

வேலூரில்

1000 பேருக்கு நிவாரணம்!

வேலூர்மே.2–

வேலூர்மாநகராட்சி 22, 24வது வார்டில் உள்ளரங்காபுரம், மூலக்கொல்லை, நடப்பாறை, ஏரியூர், சேவியர்நகர், திருவிகநகர், மாதாகோயில்தெரு, எல்.டைப் நகர் ஆகிய பகுதிகளில் உள்ள ஏழைதொழிலாளர்கள் மற்றும் இரவுபகலாக பணிப்புரியும் 120 தூய்மை பணியாளர்கள் என ஆயிரம் பேருக்கு நிவாரணப்பொருட்களை வேலூர் தொகுதி முன்னாள் செயலாளரும், மாநகராட்சி முன்னாள் கவுன்சிலருமான சிவாஜி தலைமையில் 24வது வட்ட அதிமுக செயலாளர் வினோத்குமார், மேற்கு மாவட்ட பொருளாளர் மூர்த்தி, சத்துவாச்சாரி பகுதி செயலாளர் சுந்தரம் ஆகியோர் அரிசி, பருப்பு, மளிகை பொருட்கள், முககவசம் ஆகிய நிவாரணப்பொருட்களை வழங்கினார்கள்.

நிகழ்ச்சியில் பகுதி அவைத்தலைவர் ஆறுமுகம், முன்னாள் அவைத்தலைவர் ஜானகிராமன், சேகர், சம்பத், மாவட்ட பிரதிநிதி காலிஷா, ரமேஷ், இடிமுரசுரவி, பாண்டியன், அசோகன், துரைராஜ், மகேஷ், புருஷோத்தமன் ஆகியோர் கலந்துக் கொண்டனர்.

வேலூர் ஊரீசு கல்லூரி பேராசிரியர்கள், ஊழியர்கள் சார்பாக வேலூர் வடக்கு காவல் ஆய்வாளர் விஜயகுமாரிடம் முக கவசம், கிருமிநாசினியை கல்லூரி முதல்வர் நெல்சன் விமலநாதன், துணை முதல்வர் ரசல், நிதி ஆளுனர் காலேப் வழங்கிய காட்சி. அருகில் பேராசிரியர் மாறன் உள்ளார்.

டிஜிட்டல் கரன்சிக்கு சீனா முக்கியத்துவம்!

பீஜிங், மே. 2

சர்வதேச அளவில் அமெரிக்க கரன்சியான டாலர் வல்லாதிக்கம் செலுத்தி வருகிறது. இப்போது இதன் மவுசு குறைந்துவிட்டது என்ற போதிலும், இது முற்றிலுமாக செயலற்றுப் போய்விட வில்லை.

அமெரிக்க அதிபர் டிரம்ப், சீனாமீது தொடர்ந்து சீறிப் பாய்ந்து வருகிறார். சீனா ஆய்வகத்தில்தான் கொரோனா வைரஸ் உருவாக்கப்பட்டது என்று டிரம்ப் கூறியுள்ளது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. இந்நிலையில், அமெரிக்காவின் செல்வாக்கை முறியடிக்க வேண்டும் என்பதன் பொருட்டு, டிஜிட்டல் கரன்சிக்கு சீனா முன்னுரிமையும், முக்கியத்துவமும் அளிக்க முற்பட்டுள்ளது. இது இ–ஆர்.எம்.பி. என்று குறிப்பிடப்படுகிறது. முதல்கட்டமாக ஷென்சன், சுகோ, செங்டு, ஜியோங்கன் உள்ளிட்ட பெருநகரங்களில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. ஊழியர்களுக்கு இ–ஆர்.எம்.பி. மூலமே சம்பளம் பட்டுவாடா செய்யப்பட்டுள்ளது. இதை பயன்படுத்தி எல்லா பொருட்களையும் வாங்கலாம். அது மட்டுமல்லாமல், மெக்டோனால்ட்ஸ், ஸ்டார்பக்ஸ், சப்வே போன்ற 19 வர்த்தக நிறுவனங்களுடன் சீனா ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளது. டிஜிட்டல் கரன்சியை அறிமுகப்படுத்தியுள்ளதால் பணவீக்கம் ஏற்படுமா? என்ற கேள்வி எழுந்துள்ளது. இதற்கு பணவீக்கம் ஏற்பட இடம் கொடுக்க மாட்டோம் என்று சீன நிதி அமைச்சகம் பதில் அளித்துள்ளது.

7 பேருக்கு கொரோனா சிகிச்சை:

கோவை ஆரஞ்சு மண்டலமானது!

கோவை, மே. 2–

கோவை மாவட்டத்தில் கொரோனாவால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த இருவர் குணமடைந்து வீடு திரும்பினர். இதையடுத்து சிகிச்சை பெறுவோர் எண்ணிக்கை 9 இல் இருந்து 7 ஆக குறைந்துள்ளது.

கோவை, திருப்பூர், நீலகிரி ஆகிய மாவட்டங்களில் கொரோனா நோய்த் தொற்று உறுதி செய்யப்படுபவர்கள் கோவை இ.எஸ்.ஐ. மருத்துவமனையிலும், 7 தனியார் மருத்துவமனைகளிலும் சிகிச்சை அளிக்க அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. இவர்களில் குணமடைந்தவர்கள் கடந்த ஏப்ரல் முதல் வாரத்தில் இருந்து வீடுகளுக்குத் திரும்பி வருகின்றனர். கோவை மாவட்டத்தில் 141 பேரில் நேற்று முன்தினம் வரை 132 பேர் குணமடைந்து வீடு திரும்பினர். இதையடுத்து சிகிச்சை பெறுவோர் எண்ணிக்கை 9 ஆக குறைந்தது. சிகிச்சை பெறுவோரின் எண்ணிக்கை ஒற்றை இலக்கத்தை அடைந்ததையடுத்து கோவை மாவட்டம் சிவப்பு மண்டலத்தில் இருந்து ஆரஞ்சு மண்டலத்துக்கு மாறியுள்ளது.

இந்நிலையில் கோவை இ.எஸ்.ஐ. மருத்துவமனையில் இருந்து கோவையைச் சேர்ந்த மேலும் 2 பேர் குணமடைந்து நேற்று வீடுகளுக்குத் திரும்பினர். தற்போது தனியார் மற்றும் இ.எஸ்.ஐ. மருத்துவமனைகளில் கோவை மாவட்டத்தைச் சேர்ந்த 3 ஆண்கள், 4 பெண்கள் உள்பட 7 பேர் மட்டுமே சிகிச்சை பெற்று வருகின்றனர்.

மாலைமுரசு தொலைக்காட்சி இணையதளத்தில் காண

www.malaimurasu.in

Published by S.N.Selvam on behalf of M/s.Chennai Murasu Pvt. Ltd., from Vellore Murasu Achagam, Shed No.7, Sidco Industrial Estate, 24th East Cross Street, Gandhi Nagar, Vellore – 632 006, Tamil Nadu and printed by S.Arumugam at Vellore Murasu Achagam, Shed No.7, Sidco Industrial Estate, 24th East Cross Street, Gandhi Nagar, Vellore – 632 006, Tamil Nadu. Editor : S.N.Selvam.

வேலூர் விடுதிகளில் தங்கியுள்ள

வெளி மாநிலத்தவர்களை வெளியேற்றக் கூடாது!

உயர்நீதிமன்றம் உத்தரவு!!

சென்னை, மே.2–

வேலூர் சி.எம்.சி. மருத்துவமனைக்கு வந்த வெளி மாநிலத்தவர்களை விடுதிகளில் இருந்து வெளியேற்றக் கூடாது என சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இது தொடர்பாக சென்னை உயர் நீதிமன்றத்தில் கருணா மிரியம் என்பவர் தாக்கல் செய்துள்ள மனுவில் கூறியிருந்ததாவது:

வேலூரில் உள்ள சி.எம்.சி. மருத்துவமனைக்கு தமிழகம் மட்டுமின்றி வெளி மாநிலங்களில் இருந்தும் ஏராளமானோர்சிகிச்சைக்கு வந்து செல்கின்றனர். தற்போது ஊரடங்கால் சி.எம்.சி. மருத்துவமனைக்கு வந்த சுமார் 10 ஆயிரம் பேர், சொந்த ஊர்களுக்கு திரும்ப முடியாமல் சிக்கித்தவித்து வருவதாக மாவட்ட நிர்வாகம் புள்ளி விவரங்களை வெளியிட்டுள்ளது.

இவர்கள் தற்போது பல்வேறு விடுதிகளில் தங்கியுள்ளனர். இவர்களின் மாத வாடகை மற்றும் உணவுக்கான செலவை அரசு ஏற்றுக் கொள்ளும் என்று மாவட்ட நிர்வாகம் ஏற்கனவே உத்தர விட்டு இருந்தது.

ஆனால், தற்போது முழு வாடகையையும் ஏற்க முடியாது என்றும், 50 சதவீதத்தை விடுதிகளில் தங்கியிருப்பவர்களும், 25 சதவீதத்தை அரசும், எஞ்சிய 25 சதவீதத்தை விடுதி உரிமையாளர்களும் ஏற்க வேண்டும் என்றும் உத்தர விட்டுள்ளது.

இதனால் விடுதி உரிமையாளர்கள், வெளிமாநிலத்தவர்களை காலி செய்யுமாறு வற்புறுத்தி வருகின்றனர். ஆகவே, அவர்களின்விடுதி வாடகை மற்றும் உணவு செலவை அரசு ஏற்க உத்தர விட வேண்டும்.

அத்துடன் விடுதிகளில் இருந்து அவர்களை காலி செய்வதற்கு தடை விதிக்க வேண்டும்.

இவ்வாறு குறிப்பிட்டிருந்தார்.

இந்த வழக்கை விசாரித்த நீதிபதிகள் எம்.சத்தியநாராயணன், எம்.நிர்மல்குமார் ஆகியோர், இந்த வழக்கில் விடுதி உரிமையாளர்கள்சங்கத்தையும் எதிர்மனுதாரராக சேர்க்க உத்தரவிட்டு, அரசு பதிலளிக்க உத்தரவிட்டனர். மேலும் வரும் 7ந் தேதி வரை விடுதிகளில் தங்கியிருப்பவர்களை வெளியேற்றக்கூடாது எனவும் வேலூர் மாவட்ட நிர்வாகத்துக்கு உத்தரவிட்டுள்ளனர்.

சென்னையிலிருந்து

பால், சிலிண்டர் வண்டியில் வந்த 4 பேர் பிடிபட்டனர்!!

வந்தவாசியில் சம்பவம் !!

வந்தவாசி, மே.2

சென்னையிலிருந்து வந்தவாசிக்கு பால்வண்டி, சிலிண்டர் வாகனம் மூலம் வந்த 4 பேரை அதிகாரிகள் பிடித்துள்ளனர்.

திருவண்ணாமலை மாவட்டம் வந்தவாசி பகுதியை சேர்ந்த கணவன், மனைவி சென்னை விருகம்பாக்கத்தில் இருந்துள்ளனர். அவர்கள் ஊரடங்கு உத்தரவால் சொந்த ஊருக்கு திரும்ப முடியாமல் தவித்தனர். இந்நிலையில் சென்னை கிண்டியில் இருந்து போளூர் நோக்கி பால் வண்டி ஒன்று வந்து கொண்டிருந்தது. அதில் அவர்கள் இருவரும் ஏறி உள்ளனர். வண்டியை ஆனைபோகி பகுதியைச் சேர்ந்த துரைசாமி ஓட்டியுள்ளார்.

இதற்காக அவர்களிடம் கட்டணம் வசூலிக்க பட்டதாக தெரிகிறது. இந்நிலையில் வந்தவாசி அடுத்த மும்முனிபகுதியில்.அதிகாரிகள் வாகன சோதனை செய்த போது இருவரும் சிக்கியுள்ளனர். அவர்களை அதிகாரிகள் தனிமைப்படுத்தி உள்ளனர். பால்வண்டியை அதிகாரிகள் பறிமுதல் செய்தனர்.

மற்றொரு சம்பவம்

இதேபோல் திருவண்ணாமலை மாவட்டம் துரிஞ்சாபுரம் பகுதியைச் சேர்ந்த 2 பேர்சென்னையில் இருந்து சிலிண்டர் ஏற்றி வந்த வாகனம் ஒன்றில் வந்துள்ளனர்.

அவர்களும் வந்தவாசியில் வந்தபோது அதிகாரிகளால் பிடிக்கப்பட்டனர். இருவரையும் அதிகாரிகள் தனிமைப் படுத்தி உள்ளனர். இதேபோல் வந்தவாசியில் இருந்து செங்கல்பட்டுக்கு காய்கறி ஏற்றிச்சென்ற வேன், மீண்டும் திரும்பியபோது அதில் 57 பேர் வருவதாக அதிகாரிகளுக்கு தகவல் வந்தது. இதனால் அங்கு வாகன சோதனை கடமையாக்கப் பட்டுள்ளது.

துவணி அறக்கட்டளையின் செல்லக்குட்டி திட்டத்தின்கீழ் காட்பாடி பகுதியில் தெரு நாய்களுக்கு உணவு வழங்கப்பட்ட காட்சி.

காவேரிப்பாக்கம்

வங்கி அதிகாரிக்கு கொரோனா உறுதி!

கிளைக்கு பூட்டு போடப்பட்டது!!

அரக்கோணம், மே. 2

காவேரிப்பாக்கத்தில் உள்ள வங்கி அதிகாரிக்கு கரோனா தொற்று உறுதியாகியுள்ள நிலையில் அந்த வங்கியை நெமிலி தாசில்தார்தலைமையில்வருவாய் துறையினர்பூட்டி சீல் வைத்தனர்.

ராணிப்பேட்டை மாவட்டம் காவேரிப்பாக்கம் நெடுஞ்சாலையில் தேசியமயமாக்கப்பட்ட வங்கியுள்ளது. இந்த வங்கியில் பணியாற்றிய மேலாளர் கடந்த 20 ஆம் தேதி முதல் 3 நாட்கள் விடுமுறையில் சென்றுவிட்டார். இதை தொடர்ந்து வாலாஜா வங்கி அதிகாரி இந்த வங்கியில் பொறுப்பு அதிகாரியாக பணியாற்றி வந்தார். இந்த அதிகாரியின் குடும்பத்தார் சென்னையில் வசித்து வருகின்றனர். இந்நிலையில் இவரது தந்தை கடந்த சில நாட்களாக காய்ச்சல், சளி, இருமல் ஆகிய தொல்லைகளால் அவதிப் பட்டு வந்தார். இதனால் அவருக்கு கரோனா பரிசோதனை செய்யப்பட்டதில் அது உறுதி செய்யப்பட்டது.

இதை தொடர்ந்து சுகாதார துறையினர் வங்கி அதிகாரியின் குடும்பத்தார் அனைவருக்கும் கரோனா சோதனைசெய்தனர். இதில் வங்கி அதிகாரி மற்றும் அவரது குடும்பத்தை சேர்நத 4 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டது. இந்த 5 பேரும் சென்னை மாவட்ட கரோனா பட்டியலில் சேர்க்கப்பட்டனர். இதை தொடர்ந்து வங்கியை நேற்று நெமிலி தாசில்தார் தலைமையில் அதிகாரிகள் பூட்டி சீல் வைத்தனர். மேலும் வங்கி முழுவதும் கிருமி நாசினி தெளிக்கப் பட்டது. இது தவிர வங்கியில் பணியாற்றிய மற்ற ஊழியர்கள் மற்றும் வங்கிக்கு சென்று வந்த வாடிக்கையாளர்களின் விவரங்களைஅதிகாரிகள்சேகரித்து அவர்களுக்கு கரோனா சோதனை செய்யும் நடவடிக்கையில் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

நேரம் நல்ல நேரம்

ஜோதிட ரத்னா– லியோ தங்கம்

துலா ராசி

செய்ய வேண்டிய வேலைகளை எல்லாம் பொறுமையுடன் கவனிக்க வேண்டும். ராசி அதிபதி பலம் இல்லாமல் சொந்த வீட்டில் இருப்பதால் புது வேலைகளில் இப்போது கவனம் செலுத்த வேண்டும். கிடைக்கும் வாய்ப்புகளை எல்லாம் தாமதம் இல்லாமல் கவனிப்பதும் அவசியம். குரு அருளால் எதிர்பாராமல் பெரிய செலவுகளையும் ஏற்க வேண்டியதும் வரலாம். பிள்ளைகளின் எதிர்காலம் காரணம் ஏற்படும் முயற்சிகளில் வெற்றி பெறலாம்.

கந்திலி ஒன்றியத்தில் பணிபுரியும் தூய்மை பணியாளர்களுக்கு அமைச்சர் கே.சி. வீரமணி நிவாரண பொருட்களை வழங்கிய காட்சி. அருகில் முன்னாள் எம்.எல்.ஏ. கே.ஜி ரமேஷ், ஆட்சியர் சிவனருள் எஸ்பி விஜயகுமார் ஆகியோர் உள்ளனர்.

கலை அறிவியல்

பட்டப் படிப்புகளுக்கும் நுழைவுத் தேர்வு நடத்துவதா?

வைகோ கண்டனம்!

சென்னை, மே. 02–

கலை அறிவியல் பட்டப் படிப்புகளுக்கும் பொது நுழைவுத் தேர்வு நடத்துவதா என்று மதிமுக பொதுச் செயலாளர் வைகோ கண்டனம் தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:–

அரியானா மத்தியப் பல்கலைக் கழக முன்னாள் துணை வேந்தர் ஆர். சி.குஹாத் தலைமையில், பல்கலைக் கழக மானியக் குழு (யூ.ஜி.சி), கொரோனா பேரிடரால் தள்ளி வைக்கப் பட்டுள்ள தேர்வுகளைத் தொடங்குவது குறித்தும், அடுத்த கல்வி ஆண்டிற்கhனபாடங்களைத்தொடங்குவது குறித்தும் ஆராய்ந்து தனது பரிந்துரைகளை அளித்துள்ளது.

இக்குழு அளித்திருக்கும் பரிந்துரைகளில், மருத்துவப் படிப்புக்கு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள தேசிய தகுதிகாண் நுழைவுத் தேர்வு (நீட்) போன்று, கலை அறிவியல் படிப்புகளுக்கும் தேசிய மற்றும் மாநில அளவில் நுழைவுத் தேர்வு நடத்த வேண்டும் என்பதும் இடம்பெற்று இருக்கிறது.

வைகோ

கலை, அறிவியல் பட்டப் படிப்புகளில் சேரும் கிராமப்புற ஏழை, பிற்படுத்தப்பட்ட, ஒடுக்கப்பட்ட மாணவர்களின் எதிர்காலத்தை முடக்கிப் போடும் வகையில், நுழைவுத் தேர்வை அறிமுகம் செய்வது அநீதியாகும். இது கண்டனத்துக்கு உரியது.

மருத்துவம், பொறியியல் உள்ளிட்ட தொழில் படிப்புகளில் பயிலும் வாய்ப்பற்ற பின்தங்கிய, பட்டியல் இனச்சமூக மாணவர்கள் மற்றும் அனைத்துச் சமூகங்களையும் சார்ந்த மாணவர்கள் கலை, அறிவியல் படிப்புகளைத்தான் நம்பி உள்ளனர். அவர்களின் எதிர்காலத்தைக் கேள்விக்குறியாக்கும் நுழைவுத் தேர்வைப்புகுத்துவதுசமூக நீதிக்கும் எதிரானது ஆகும்.

எனவே மத்திய பா.ஜ.க. அரசு, கலை அறிவியல் பட்டப் படிப்புகளுக்கு நுழைவுத் தேர்வு நடத்தச் செய்யப்பட்டு இருக்கும் பரிந்துரையை நிராகரிக்க வேண்டும் என்று வலியுறுத்துகிறேன்.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

கொரோனா நிவாரண நிதி திரட்ட

சத்குரு வரைந்த ஓவியம் ரூ.4.14 கோடிக்கு விற்பனை!

கோவை, மே. 2–

கொரோனா பிரச்சினையால் வாழ்வாதாரத்தை இழந்து தவிக்கும் கோவை தொண்டாமுத்தூர் பகுதி மக்களுக்கு ஈஷா கிராமப் புத்துணர்வு இயக்கம் சார்பில் நிவாரண உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

சுமார் 2 லட்சம் மக்கள் தொகை கொண்ட இந்த பகுதியில் கிட்டத்தட்ட அனைத்து கிராமங்களிலும் உணவின்றி தவிக்கும் ஆயிரக்கணக்கான மக்களுக்கு அவர்களின் வீட்டிற்கே சென்று உணவும், நில வேம்பு கசாயமும் தினமும் வழங்கப்படுகிறது. இந்த பணியில் சுமார் 700 தன்னார்வலர்கள் ஈடுபட்டுள்ளனர்.

சேவையாற்றி வரும் மருத்துவ பணியாளர்கள், தூய்மை பணியாளர்கள் மற்றும் காவல் துறையினருக்கு தேவையான உதவிகளையும் ஏப்ரல் 1ம் முதல் ஈஷா செய்து வருகிறது.

இந் நிலையில், கொரோனா நிவாரணப் பணிகளுக்கு நிதி திரட்டும் விதமாக ஈஷா அறக்கட்டளை நிறுவனர் சத்குரு, ‘முழுமையாக வாழ’ என்ற தலைப்பில் 5 க்கு 5 அடி அளவில் ஒரு வடிவமற்ற ஓவியத்தை வரைந்தார். அந்த ஓவியம் சில தினங்களுக்கு முன் ஆன்லைனில் ஏலம் விடப்பட்டது. ஒருவர்அந்த ஓவியத்தை ரூ.4 கோடியே 14 லட்சத்துக்கு வாங்க சம்மதித்துள்ளார்.

இது தொடர்பாக சத்குரு கூறுகையில், “இது கொரோனா நிவாரணத்திற்காக வழங்கப்பட்ட நிதி. எனது ஓவியத்திற்கான விலை அல்ல. சமுதாயத்தில் வாழும் ஏழைகளின் நலனுக்காக அரசும், அரசு நிர்வாகமும் அதிகம் செயல் செய்து வருகின்றன. இருப்பினும், அதில் இன்னும் சில விரிசல்கள் விழலாம். எனவே, இந்த சவாலான சூழலில் யாரும் பசியால் தவிக்காமல் பார்த்து கொள்வது ஒவ்வொரு குடிமக்களின் பொறுப்பு” என்றார்.

கொரோனா தடுப்பு பணியில் ஈடுபடும் காட்பாடி ஆட்டோ ஓட்டுனர்களுக்கு மே தினத்தை முன்னிட்டு அரிசி மூட்டையை ஆய்வாளர் புகழேந்தி வழங்கிய காட்சி

திருவண்ணாமலை மாவட்டத்தில்

960 கிராமங்களிலும் கண்காணிப்புக் குழு!

திருவண்ணாமலைமே.2–

திருவண்ணாமலைமாவட்டத்தில்கொரோனா நோய்தடுப்புபணிக்காககிராம அளவில் 860 கிராமபஞ்சாயத்துகளிலும்கொரோனாவைரஸ்பரவாமல்தடுக்ககண்காணிப்புகுழுஅமைக்கப்பட்டுள்ளது.

இந்தகுழவிற்குகிராமபஞ்சாயத்துதலைவர்தலைமை தாங்குவார்.மேலும்ஊராட்சிமன்றதுணைத்தலைவர், கிராமநிர்வாகஅலுவலர், ஊராட்சிசெயலாளர், ஊராட்சிஉதவியாளர்ஆகியோர்உறுப்பினர்களாகபணியாற்றுவர்கள்என்றுமாவட்டஆட்சியர்கந்தசாமி தெரிவித்தார்.

இந்தகுழுவினர்தங்களின்கிராமத்தில்வெளிமாநிலம், வெளிமாவட்டம்மற்றும்பிறஊர்களில்இருந்துவருபவர்கள்திருமணம்மற்றும்துக்கநிகழச்சிகளில்பங்கேற்கவெளியூர்களில்இருந்துவருபவர்கள்மற்றும்வெளியூர்களுக்குசெல்பவர்களைஆகியோர்களைகண்காணித்துதகவல்அளிக்கவேண்டும். மாவட்டஎல்லைப்புறகிராமங்களில்உள்ளவர்கள்வெளிநபர்கள்ஊடுறுவலைதடுக்கவேண்டும். இரவுநேரத்தில்ரோந்துபணிகள்மூலம்கண்காணிக்கவேண்டும்.

பொதுஇடங்களில்பொதுமக்கள்சமூகஇடைவெளியைபின்பற்றவேண்டும்.

கிராமஊராட்சிகளில் கொரோனாதடுப்புபணிக்காகஎடுக்கப்பட்டநடவடிக்கைகள்குறித்துநாள்தோறும்அந்தந்தகிராமநிர்வாக அலுவலர்கள்கட்டுப்பாட்டுஅறைக்கு 04715232377, 232703, 233141 ஆகிய தொலைபேசிஎண்களில்தகவல்தெரிவிக்கவேண்டும்என மாவட்டஆட்சியர்கந்தசாமிகேட்டுக்கொண்டார்.

கொரோனா துளிகள்

சென்னையிலிருந்து

ஆரணிக்கு வந்த 73 பேர் சிக்கினர்!

ஆரணி,மே.2

சென்னையிலிருந்து ஆரணி நோக்கி வந்த 73 பேர் அதிகாரிகளின் பிடியில் சிக்கினர்.

தமிழகத்தில் அடுத்த இரண்டு வாரங்களுக்கு தடை உத்தரவு மேலும் நீட்டிக்கப்பட்டுள்ளது. இதனை அடுத்து சென்னையில் உள்ளவர்கள் அவரவர் உங்களுக்கு படையெடுத்த வண்ணம் உள்ளனர். மேலும் சென்னை கோயம்பேடுசந்தையில்கொரோனா பாதிப்பு அதிகம் உள்ள காரணத்தினாலும் மார்க்கெட்டில் பணிபுரிந்தவர்கள் அவரவர் ஊர்களுக்கு திரும்பிய வண்ணம் உள்ளனர்.

இந்நிலையில் திருவண்ணாமலை மாவட்டம் செய்யாறு, வந்தவாசி, ஆரணி பகுதிகளைச்சேர்ந்த 73 பேர் சென்னையிலிருந்து இருசக்கர, நான்கு சக்கர வாகனங்களில் அவரவர் ஊர்களுக்கு திரும்பிக் கொண்டிருந்தனர். இதுகுறித்த தகவல் ஆரணி தாசில்தாருக்கு தெரியவந்தது. ஆரணி பகுதியில் வாகன சோதனை செய்த போது அவர்கள் அனைவரும் அதிகாரிகளிடம் சிக்கினர். அனைவரையும் அங்கு உள்ள தனியார் இடத்தில் வைத்து தனிமைப் படுத்தி உள்ளனர். இதனால் அங்கு பரபரப்பு ஏற்பட்டது.

வாணியம்பாடி

காவல் நிலையம் மீண்டும் திறப்பு!

வாணியம்பாடி, மே.2–

வாணியம்பாடி, காவல் நிலையம் 7 நாட்களுக்குப் பிறகு நேற்று முதல் மீண்டும் செயல்படத் தொடங்கியது.

வாணியம்பாடி கிராமிய காவல் நிலையத்தின் பெண் காவல் ஆய்வாளருக்கு கொரோனா தொற்று இருப்பது உறுதியானதால் அந்த காவல் நிலையம் கடந்த மாதம் 23–ம் தேதி மூடப்பட்டது. அங்கு பணியாற்றி வந்த 40க்கும் மேற்பட்ட போலீசார் தனிமைப்படுத்தப்பட்டு அவர்களுக்கும் வைரஸ் பரிசோதனை நடத்தப்பட்டது. பாதிக்கப்பட்ட பெண் காவல் ஆய்வாளர் வேலூர் அடுக்கம்பாறை அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்நிலையில், மூடப்பட்ட காவல் நிலையத்தை மீண்டும் திறக்க எஸ்.பி. விஜயகுமார் உத்தரவிட்டார்.

எனவே, அந்த காவல் நிலையம் முழுவதும் கிருமி நாசினி தெளிக்கப்பட்டு 7 நாட்களுக்கு பிறகு நேற்று திறக்கப்பட்டது. அங்கு குறைந்த அளவிலான போலீசார் பணியில் அமர்த்தப்பட்டுள்ளனர்.

திருப்பத்தூர் பகுதியில்

சாலையில் அமர்ந்து கூட்டுத் தொழுகையா?

வதந்தியால் பரபரப்பு !

திருப்பத்தூர், மே.2

திருப்பத்தூர் பகுதியில் சாலையில் அமர்ந்து இஸ்லாமியர்கள் கூட்டுத் தொழுகை நடத்துவதாக வந்த வதந்தியால் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

திருப்பத்தூர் பகுதியை சேர்ந்த 700க்கும் மேற்பட்ட இஸ்லாமியர்கள் கடந்த இரண்டு நாட்களாக நள்ளிரவில் சாலையில் மொத்தமாக அமர்ந்து கூட்டுத் தொழுகை நடத்துவதாக கூறப்பட்டது. அதுதொடர்பான புகைப்படம் ஒன்று சமூக வலைத்தளங்களில் பகிரப்பப்பட்டது. இதனையடுத்து சமூக வலைத்தளங்களில் பகிரப்பட்ட அந்தப்படம் திருப்பத்தூர் பகுதியில் எடுக்கப்பட்டது அல்ல., அலகாபாத்தில் எடுக்கப்பட்டது என்பதை போலீசார் கண்டறிந்தனர். இதனையடுத்து இதுபோன்ற தவறான படத்தை மற்றும் செய்தியை சமூக வலைத்தளங்களில் பரப்பியவர் யார் என்பது பற்றி வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். மேலும் இதுபோன்ற தவறான தகவலை வெளியிட்டால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

சென்னையிலிருந்து

மதுரைக்கு சென்ற 6 பேர் ஆம்பூரில் பிடிபட்டனர்!

ஆம்பூர், மே.2

திருப்பத்தூர் மாவட்டம் ஆம்பூர் பகுதியில் தீவிர வாகன சோதனை நடத்தப்பட்டு வருகிறது. இந்நிலையில் சென்னையிலிருந்து அடுத்தடுத்து லிப்ட் கேட்டு 6 பேர் கொண்ட கும்பல் ஆம்பூர் ரயில் நிலையத்தையொட்டி வந்து இறங்கியுள்ளது. இது குறித்த தகவல் தாசில்தார் செண்பகவல்லிக்கு தெரிய வந்தது. உடனே அங்கு சென்ற அதிகாரிகள், அவர்களை மடக்கிப் பிடித்தனர். விசாரித்ததில் அவர்கள் மதுரையைச் சேர்ந்தவர்கள் என்பதும், அடுத்தடுத்து லிப்ட் கேட்டு மதுரைக்கு சென்று விடலாம் என்ற நோக்கத்தில் அவர்கள் வந்துள்ளனர் என்பதும் தெரியவந்தது. இதனை அடுத்து அவர்கள் 6 பேரையும் மாதனூரில் உள்ள தனியார் மண்டபத்திற்கு அதிகாரிகள் அழைத்துச் சென்றனர். அங்கு அவர்களுக்கு மருத்துவ பரிசோதனை அளிக்கப் பட்டு வருகிறது.

திருவண்ணாமலையில்

23,901 மோட்டார் வாகனங்கள் பறிமுதல்!

திருவண்ணாமலைமே.2–

திருவண்ணாமலைமாவட்டத்தில் 144 தடைஉத்தரவைமீறிவெளியில்சுற்றியதாக 24 ஆயிரத்து 597 பேர்கைதுசெய்யப்பட்டனர். கொரோனாவைரஸ்தடுப்புநடவடிக்கைக்காக 144 தடைஉத்தரவுபிறப்பிக்கப்படுள்ளநிலையில்அத்தியாவசியதேவையின்றிவெளியில்சுற்றியதாக 23 ஆயிரத்து 694 இருசக்கரவாகனம், 57 ஆட்டோ, 150 நான்குசக்கரவாகனம்என மொத்தம் 23 ஆயிரத்து 901 வாகனங்கள்பறிமுதல்செய்யப்பட்டுள்ளதாகதிருவண்ணாமலைமாவட்டகாவல் கண்காணிப்பாளர்சிபிசக்கரவர்த்திதெரிவித்தார்.

மாலைமுரசு தொலைக்காட்சி

இணையதளத்தில் காண

www.malaimurasu.in

குருவராஜபாளையம் பகுதியில் வி.ஆர்.எஸ்.எஸ். அறக்கட்டளை சார்பாக 160 தூய்மைப் பணியாளர்கள் மற்றும் இருளர் குடும்பத்தினருக்கு ரூ. 80 ஆயிரம் மதிப்புள்ள அரிசி, பருப்பு உள்ளிட்ட மளிகைப் பொருட்களை அறக்கட்டளை உறுப்பினர்கள் சக்கரபாணிராஜா, நீலமேகம், குமார், பாபு சேகர், பத்மராஜ், சந்திரசேகர், சிவகுமார் ஆகியோர் வழங்கிய காட்சி.

சென்னையில் இருந்து செங்கம் வந்த 60 பேரை தங்கவைப்பதில் சிக்கல் !

பொதுமக்கள் எதிர்ப்பு!!

செங்கம், மே.2–

மோட்டார் சைக்கிள்களில் செங்கத்தை நோக்கி படையெடுத்த 60 பேரை அதிகாரிகள் பிடித்து அருகிலுள்ள தனியார் மண்டபத்தில் தனிமை படுத்தினர். அவர்களை ஊருக்கு ஒதுக்குப்புறமாக தனிமைப்படுத்தி வையுங்கள் என்று பொதுமக்கள் எதிர்ப்பு தெரிவித்ததால் பரபரப்பு ஏற்பட்டது.

ஊரடங்கு உத்தரவு இன்னும் இருவாரங்களுக்கு நீட்டிக்கப்பட்டுள்ள நிலையில் மாநிலத்தின் தலைநகரமான சென்னையிலிருந்து ஏராளமான மக்கள் தற்போது சொந்த ஊர்களை நோக்கி படையெடுத்த வண்ணம் உள்ளனர். அவர்களில் பெரும்பாலானோர் அனுமதி பெறாமல் செல்கின்றனர்.

செங்கம் இந்நிலையில் திருவண்ணாமலை மாவட்டம் செங்கத்தை சுற்றியுள்ள கிராமத்தை சேர்ந்த பெரும்பாலானோர் நேற்று இரவில் 30க்கும் மேற்பட்ட மோட்டார் சைக்கிள்களில் சென்னையில் இருந்து செங்கத்தை நோக்கி அனுமதி பெறாமல் படையெடுத்தனர். அவர்கள் அனைவரும் வாகன சோதனையின் போது சிக்கினர். இதுகுறித்து மாவட்ட நிர்வாகத்திடம் தகவல் தெரிவிக்கப்பட்டதை அடுத்து பிடிபட்ட 60 பேர் செங்கம் பழைய பஸ் நிலையம் அருகில் உள்ள தனியார் மண்டபத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டு அங்கு தனிமைப்படுத்தப் பட்டனர். இதற்கு அப்பகுதி பொதுமக்கள்கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர். குடியிருப்பு பக்கத்தில் அவர்களை வைப்பது பெரும் விபரீதத்தை ஏற்படுத்தும். எனவே அவர்களைஊருக்கு ஒதுக்குப்புறமாக வைக்க வேண்டும்என்றுகோரிக்கை வைத்துள்ளனர்.

கொரோனாவால் பாதிக்கப்பட்டுள்ளவர்களுக்கு உதவுமாறு திமுக தலைவர் மு.க. ஸ்டாலின் வேண்டுகோள் விடுத்துள்ளதை தொடர்ந்து ராணிப்பேட்டை மாவட்ட திமுக செயலாளர் ஆர். காந்தி அறிவுறுத்தலின் பேரில் பனப்பாக்கத்தில் நெமிலி மேற்கு ஒன்றிய செயலாளர் ஆர்.பி., ரவீந்திரன் தலைமையில் மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் எஸ்ஜிசி. பெருமாள் ஏற்பாட்டின் பேரில் சுமார் 200 பேருக்கு மதிய உணவு வழங்கப்பட்டது. இதில் நகர செயலாளர் என்.ஆர். சீனிவாசன், மாவட்ட நெசவாளர் அணி விஎஸ்ஏ. குலோத்துங்கன், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் வி.எஸ். முரளி, மாவட்ட விவசாய அணி துணை அமைப்பாளர் க. தண்டபாணி, ஒன்றிய துணை செயலாளர் ஈ. வெங்கடேசன் உட்பட பலர் உள்ளனர்.

வேலூர் மாவட்ட த.மா.கா. தலைவர் பி.எஸ். பழனி, வேலூர் வேலப்பாடியில் மாநகராட்சி தூய்மைப் பணியாளர்களுக்கு அரிசி உள்ளிட்ட 15 வகையான மளிகை பொருட்களை வழங்கிய காட்சி. அருகில் மாநகர தலைவர் சேகர், இளைஞரணி தலைவர் பாலகணேஷ், துணைத் தலைவர் சீனிவாசன், தினேஷ் மாறன், வெங்கடேசன், ராஜேஷ் கண்ணா மற்றும் சதீஷ் ஆகியோர் உள்ளனர்.

திருப்பத்தூர் பகுதிகளில் கள்ளச் சாராயம் விற்ற 3 பேர் பிடிபட்டனர் !

திருப்பத்தூர், மே.2

திருப்பத்தூர் பகுதிகளில் கள்ளச்சாராயம் மற்ற 3 பேரை போலீசார் அதிரடியாக கைது செய்தனர்.

ஊரடங்கு உத்தரவு அமலில் உள்ள நிலையில் தமிழகம் முழுவதும் டாஸ்மாக் கடைகளுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. இதனையடுத்துபல்வேறு இடங்களில் கள்ளச்சாராய விற்பனை அமோகமாக நடந்து வருகிறது.

திருப்பத்தூர் பகுதிகளில் கள்ளச்சாராய கும்பல் அதிகமாக நடமாடுவதை அடுத்து போலீசார் அவர்களை பிடிக்க தீவிர நடவடிக்கை எடுத்த வண்ணம் உள்ளனர்.

இந்நிலையில் திருப்பத்தூர்காவல் நிலைய சப்இன்ஸ்பெக்டர்ராஜேந்திரன் மற்றும் போலீசார் அப்பகுதியில்தீவிரசோதனையில் ஈடுபட்டனர். அப்போது ஏலகிரி மலை பகுதியை சேர்ந்த கோவிந்தராஜ் (வயது 45) என்பவர் கள்ளச்சாராயம் விற்பதை போலீசார் கண்டறிந்தனர். இதனையடுத்து அவரை கைது செய்த போலீசார் அவரிடம் இருந்து 10 லிட்டர் கள்ளச்சாராயத்தை பறிமுதல் செய்தனர்.

இதேபோல்திருப்பத்தூர் தாலுகா சப்இன்ஸ்பெக்டர் மஞ்சுநாத்மற்றும்போலீசார் அவ்வைநகர்பகுதியில்தீவிர சோதனை நடத்தினர்.

அப்போதுஅப்பகுதியை சேர்ந்த சதா ஆனந்த் (வயது 42)மற்றும்அசோகன்(வயது 52) ஆகியோர் கள்ளச்சாராயம்விற்பதைபோலீசார்கண்டறிந்தனர். இருவரையும் கைதுசெய்தபோலீசார்அவர்களிடம் இருந்து கள்ளச்சாராயத்தைபறிமுதல்செய்தனர்.

வேலூர் மாநகராட்சி 22, 24வது வார்டில் பணிபுரியும் தூய்மைப் பணியாளர்கள் மற்றும் ஏழை மக்கள் என 1,000 பேருக்கு நிவாரண பொருட்களை முன்னாள் அ.தி.மு.க. வேலூர் தொகுதிச் செயலாளரும் முன்னாள் கவுன்சிலருமான சி.கே. சிவாஜி தலைமையில், மாவட்ட பொருளாளர் மூர்த்தி வழங்கிய காட்சி. அருகில் பகுதி செயலாளர் ஏ.பி.எல். சுந்தரம், அவைத் தலைவர் ஆறுமுகம், ஜானகிராமன், எல்.வி. சேகர், சம்பத், பிரதிநிதி காலிசா, ரமேஷ், இடிமுரசு, ரவி, பாண்டியன், அசோகன், துரைராஜ், மகேஷ், புருஷோத்தமன் ஆகியோர் உள்ளனர்.

திருப்பத்தூர் மாவட்டம் ஆரஞ்சு மண்டலமாக மாறியது!

திருப்பத்தூா். மே. 2–

கடந்த 14 நாள்களாக புதிதாக யாருக்கும் கொரோனா நோய்த் தொற்று உறுதி செய்யப்படாததால்திருப்பத்தூா்மாவட்டம்ஆரஞ்சு மண்டலத்துக்கு மாறியுள்ளது.

திருப்பத்தூர் மாவட்டத்தில் கடந்த 14 நாள்களுக்கு முன்பு 18 பேருக்கு கரோனா நோய்த் தொற்று உறுதி செய்யப்பட்டது. அவா்களில் 17 போ் குணமடைந்து வீடு திரும்பியுள்ளனா். ஒருவா் சிகிச்சையில்உள்ளார். இந்நிலையில், மாவட்ட நிர்வாகம் முன்னெடுத்துவரும் தடுப்பு நடவடிக்கை காரணமாக கடந்த 14 நாள்களாக புதிதாக யாருக்கும் கொரோனா ஏற்படவில்லை. இதன் காரணமாக திருப்பத்தூர் மாவட்டம் சிவப்பு மண்டத்தில் இருந்து ஆரஞ்சு மண்டலத்துக்கு முன்னேறி உள்ளது.

இதேநிலைமேலும்14நாள்களுக்குநீடித்தால் பச்சை மண்டலமாக அறிவிக்கப்படும் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

தினமும் மாலைமுரசு படியுங்கள்

ஊரடங்கால் இறுதிச்சடங்கில் பங்கேற்க முடியாத ரிஷிகபூர் மகள்!

பிரபல பாலிவுட் நடிகரான ரிஷி கபூர் உடல் நலக் குறைவால் மும்பையில் மருத்துவமனையில் சிகிச்சைப் பலனின்றி உயிரிழந்தார். அவரது மறைவுக்கு பிரதமர் மோடி, ரஜினி, கமல், ராதாரவி உட்பட பாலிவுட் பிரபலங்கள் பலரும் இரங்கல் தெரிவித்தனர். இந்நிலையில் ஊரடங்கு மற்றும் கொரோனா அச்சுறுத்தலால் ரிஷி கபூரின் உடலை அவரது வீட்டிற்கு கொண்டு செல்லாமல் மருத்துவமனையில் இருந்து நேரடியாக மயானத்திற்கு கொண்டு செல்லுமாறு மும்பை போலீஸார் கேட்டுக்கொண்டதை அடுத்து,நேற்று முன்தினம் மருத்துவமனையில் இருந்து அவரது உடல் அருகில் உள்ள சந்தவன்வாடி மயானத்திற்கு கொண்டு செல்லப்பட்டு தகனம் செய்யப்பட்டது.

இதில் ரிஷி கபூரின் குடும்பத்தார், உறவினர்கள் மற்றும் நெருங்கிய நண்பர்கள் பங்கேற்றனர். ஆனால் ரிஷி கபூரின் ஒரே மகளான ரித்திமா கபூரால் பங்கேற்க முடியவில்லை. ரிஷி கபூரின் மகள் ரித்திமா கபூர், தனது கணவர் பரத் சஹ்னி மற்றும் மகள் சமராவுடன் டெல்லியில் வசித்து வருகிறார். தந்தையின் இறுதிச்சடங்கில் பங்கேற்க மும்பை செல்ல வேண்டும் என்று அவர் டெல்லி போலீஸாரிடம் கோரினார். ஆனால் அவருக்கு சாலை வழியாக செல்லவே அனுமதி வழங்கப்பட்டதால், டெல்லியில் இருந்து 1400 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள மும்பைக்கு செல்ல 18 மணி நேரம் ஆகும் என கூறப்பட்டது. இதனை தொடர்ந்து ரிஷி கபூரின் மகள் இல்லாமலே அவரது உடல் தகனம் செய்யப்பட்டது. கடைசியாக என் அப்பாவின் முகத்தை பார்க்க முடியவில்லையே என அவர் கதறியழுதது பலரையும் கலங்க வைத்து விட்டது.

புது ஹீரோக்கள் வந்துடக் கூடாதுன்னு சதி நடந்திட்டு இருக்கு!

பன்னீர்செல்வம் 'பகீர்' தகவல்!!

சூர்யா தயாரிப்பில்,ஜோதிகா நடிப்பில் உருவாகியுள்ள 'பொன்மகள் வந்தாள்' படத்தை ஓடிடியில் வெளியிடுவதற்கு தியேட்டர் அதிபர்கள்,கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ள நிலையில் பெரும்பாலான பட அதிபர்கள் ஆதரவு தெரிவித்து வருகின்றனர்.

இந்நிலையில் தமிழ்நாடு திரையரங்குகளின் சங்க பொதுச்செயலாளர் பன்னீர்செல்வம் கூறுகையில், "சின்னப்படங்கள் நல்லா ஓடுனா, எங்கள மாதிரி சந்தோஷப்படுறவங்க யாருமே இருக்கமாட்டாங்க. நாங்க சின்னப் படங்களுக்கு தியேட்டர் கொடுக்காம தான் கடந்த வருடம் 190 படங்கள் ரிலீஸ் ஆகியதா ? அவங்க 800 படங்கள் எடுத்து வச்சுருந்தா, எப்படி தியேட்டர் கிடைக்கும். ஆயிரம் தியேட்டரில் 800 படங்களை எப்படி ரிலீஸ் செய்ய முடியும் ? பெரிய படங்களினால் எங்களுக்கு லாபமே கிடையாது. காரணம், சீட்டு கிழியிறது, பந்தோபஸ்துக்கு ஆள்போடுறதுனு செலவு அதிகம். 'ஓடிடி'யினால் புது ஹீரோக்கள், இயக்குநர்கள் உருவாக மாட்டார்கள். ரஜினி, கமல், விஜய், அஜித் உள்பட பல ஹீரோக்கள் படங்களை தியேட்டர்களில் ரசிகர்கள் விசிலடித்து,கை தட்டி,அங்கே கட்டப்பட்ட பேனர்களுக்கு, 'கட் அவுட்'களுக்கு பாலாபிஷேகம் பண்ணி தான் வளர்த்தார்கள்.

அது ஓடிடியில் நடக்காது. புது ஹீரோக்கள் வந்துடக்கூடாதுன்னு சதி நடந்திட்டு இருக்கு. டிவி சீரியல்களில் நடிப்பவர்கள் பிரபலமாக முடிந்ததா ? ராஜா ராணி திரைப்படம் இயக்குனர் அட்லி க்கு எவ்வளவு பெரிய வளர்ச்சியைக் கொடுத்தது. ஆனால்,அந்தப்படம் ஓடிடியில் வெளியாகியிருந்தால், அவர் இருக்கிற இடமே தெரிஞ்சிருக்காது' என்கிறார்.

வெப் தொடர் தயாரிப்பில் இறங்கிய ஏ.ஆர். முருகதாஸ்!

'தர்பார்' படத்தைத்தொடர்ந்து, ஏ.ஆர். முருகதாஸ் அடுத்து, விஜய் நடிக்க இருக்கும் புதிய படத்தை இயக்க உள்ளதாகவும், இந்த படத்தின் படப்பிடிப்பு விரைவில் தொடங்கும் என்றும் தகவல்கள் வெளியான நிலையில், திடீரென கொரோனா வைரஸ் காரணமாக ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதால் இந்த படத்தின் படப்பிடிப்பு தேதி எதுவும் குறிப்பிடாமல் தள்ளிவைக்கப்பட்டு விட்டதாக கூறப்படுகிறது. இந்நிலையில், இயக்குனர் ஏ.ஆர். முருகதாஸ் வெப்தொடர் ஒன்றை தயாரிக்க உள்ளதாகவும் இதில், 'ஓ மை கடவுளே' படத்தில் நடித்த வாணி போஜன் முக்கிய வேடத்தில் நடிக்க உள்ளதாகவும் கூறப்படுகிறது. இந்த படத்தை ஏ.ஆர். முருகதாஸின் உதவியாளர் ஒருவர் இயக்க இருப்பதாகவும் ,கொரோனா பரபரப்பு முடிந்ததும் இதன் படப்பிடிப்பு தொடங்கும் என்றும் இந்த வெப்சீரீஸில் நடிக்கும் மற்ற நட்சத்திரங்கள் குறித்த அறிவிப்பு விரைவில் வெளிவரும் என்றும் கூறப்படுகிறது. ஊரடங்கு முடிவுக்கு வந்தாலும், திரையரங்குகள் திறப்பது மேலும் தாமதம் ஆகும் எனக்கூறப்படும் நிலையில்,ஏ.ஆர் முருகதாஸ் வெப் தொடர் தயாரிப்பில் இறங்கியுள்ளது குறிப்பிடத் தக்கது.

சந்திரமுகி 2-ம் பாகத்தில் ரஜினி, ஜோதிகா?

பி.வாசு இயக்கத்தில், ரஜினிகாந்த் நடிப்பில் கடந்த 2005ஆம் ஆண்டு வெளியாகி, தமிழக ரசிகர்கள் மத்தியில், பெரும் வரவேற்பை பெற்ற திரைப்படம், 'சந்திரமுகி'. இந்நிலையில் கிட்டத்தட்ட 15 ஆண்டுகள் கழித்து இப்படத்தின் இரண்டாம் பாகம் குறித்த அறிவிப்பு சமீபத்தில் வெளியானது.

பி.வாசு இயக்கத்தில் உருவாகவுள்ள 'சந்திரமுகி 2' படத்தில் ரஜினிகாந்த் நடித்த மனோ தத்துவ டாக்டர் வேடத்திலேயே ராகவா லாரன்ஸ் நடிப்பார் என்றும், அதில் முக்கிய வேடத்தில் நடித்த வடிவேலு இப்படத்தில் நடிக்கவுள்ளதாகவும் இது குறித்து அவரிடம் பேச்சுவார்த்தை நடப்பதாகவும் கூறப்பட்டது.

இந்நிலையில் 'சந்திரமுகி 2' திரைப்படம் வேட்டையன் மற்றும் சந்திரமுகி இடையே நடக்கும் மோதல் தான் கதை என்றும், இதில் வேட்டையன் என்ற மன்னன் கேரக்டரில் ராகவா லாரன்ஸ் நடிக்கவிருப்பதாகவும் இயக்குனர் பி.வாசு கூறியுள்ளார்.

மேலும் 'சந்திரமுகி' படத்தில் ரஜினிக்கு ஜோடியாக நடித்த நயன்தாரா இதில் நடிக்க வாய்ப்பில்லை என்றும், அதே சமயம் சந்திரமுகியாகவே வாழ்ந்த ஜோதிகாவை 2–ம் பாகத்திலும் நடிக்க வைக்க இயக்குனர் தரப்பில் முயற்சித்து வருவதாகவும் கூறப்படுகிறது.

மேலும் இதில், முதல் பாகத்தின் கதாநாயகனான மனோதத்துவ டாக்டர் வேடத்தில் நடித்த ரஜினிகாந்த் மற்றும் வடிவேலு ஆகியோரை சிறப்பு வேடத்தில் நடிக்க வைக்கவும் முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறதாம்.

பிறந்த நாளில் ரசிகர்களை ஏமாற்றிய அஜித்!

'நேர்கொண்ட பார்வை' படத்தைத் தொடர்ந்து, அஜித் மீண்டும் எச்.வினோத் இயக்கத்தில் உருவாக்கி வரும் 'வலிமை' படத்தில் நடித்து வருகிறார். இவருக்கு ஜோடியாக பாலிவுட் நாயகி ஹுமா குரேஷி நடிக்கவுள்ளார்.

போனி கபூர் இந்த படத்தை தயாரிக்கிறார். யுவன் ஷங்கர் ராஜா இந்த படத்திற்கு இசையமைக்கிறார். இந்த படம் 2020 தீபாவளிக்கு வெளியாகும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் அஜித்தின் பிறந்தநாளான மே 1–ல் 'வலிமை' படத்தின் பர்ஸ்ட் லுக் மற்றும் புதிய அப்டேட் வெளியாகும் என அவரது ரசிகர்கள் காத்திருந்தனர்.

ஆனால், தற்போது கொரோனா காரணமாக இப்படத்தின் படப்பிடிப்பு நிறுத்திவைக்கப்பட்டுள்ள நிலையில், இப்படத்தின் தயாரிப்பாளர், 'உலகத்தையே அச்சுறுத்தி வரும் கொரோனாவின் தாக்கம் குறைந்து இயல்பு வாழ்க்கை திரும்பும் வரை தான் தயாரிக்கும் எந்த படம் குறித்த அப்டேட்டும் வராது என்றும் இது அஜித் உள்ளிட்ட படக்குழு அனைவரும் எடுத்த முடிவு" எனக் கூறியுள்ளார். இது அஜித்தின் ரசிகர்களை ஏமாற்றமடைய செய்துள்ளது.

சமந்தாவுக்கு '8' மில்லியன் ரசிகர்கள்!

திருமணத்திற்கு பிறகும் மிகவும் பிசியான கதாநாயகியாகவே நடித்து வரும் சமந்தா,சமூக வலைதளங்களில் மிகவும் ஆக்டிவாக இருந்து வருகிறார். இந்நிலையில், நடிகை சமந்தாவை ட்விட்டரில் எட்டு மில்லியன் ரசிகர்கள் பின்தொடர்ந்துள்ளனர். இதன் மூலம் எட்டு மில்லியன் ரசிகர்கள் பின்தொடரும் முதல் தென்னிந்திய நடிகை என்ற அந்தஸ்தை பெற்றுள்ளார் நடிகை சமந்தா.